பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி 09 | வெள்ளிக்கிழமை (25.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 218

# கண்காணிப்புக்குழுவின் உத்தரவை விடுதலைப் புலிகள் நிராகரித்தனர்

## ரெலிவ்சனின் வன்னி விஜயம் திடீர் ரத்து

(நமது நிருபர்)

கிண்ணியா குரங்குப்பாஞ்சான் குளப்பகுதியில் உள்ள அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்டுள்ள முகாமை அகற்றுமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு விடுத்த உத்தரவை விடுதலைப் புலிகள் நிராகரித்துள்ளனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உத்தரவு,விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டதையடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் நேற்றுத் தனது வன்னி விஜயத்தை ரத்து செய்தார்.

குரங்குப்பாஞ்சான் முகாம் அகற்ற முடியாதென்ற நிலைப்பாட்டை புலிகள எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டும் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் விடுதலைப் புலிகளிடம் கோரியிருந்தார்.

இந் நிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு வேலைப் பளுகாரணமாக கண்காணிப்புக் குழுத் தலைவரைச் சந்திக்க முடியவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

இது இவ்வாறு இருக்க, அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் உள்ள குரங்குப்பாஞ்சான் முகாமை விடுதலைப் புலிகள் அகற்றமுடியாதெனக் கூறி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் உத்தரவை நிராகரித்திருப்பதும், யுதத நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரை சு.ப.தமிழ்ச்செல்வன் சந்திக்க மறுத்திருப்பதும் புலிகளினதும் நோர்வேயினதும் உறவில் விரிசலை ஏற்படுத்தக் கூடும் என அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(ஏற்கனவே வந்த செய்தி 7ம் பக்கத்தில்) (வ)

# புலிகளுக்கு அனுப்பிய திட்டவரைபே ஜனாதிபதிக்கும் அனுப்பப்பட்டது!

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**அரசாங்கத்திற்கும்,விடுதலைப் புலிகளுக்குமிடையில் முடங்கிப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபை விடுதலைப் புலிகள் நன்கு ஆராய்ந்த பின் எமக்குத் தகுந்த பதிலை அனுப்பி வைப்பார்கள் என எதிர்பார்க்கின்றோம். இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

(10ம் பக்கம் பார்க்க)

# நிரந்தரக் குத்தகை அடிப்படையில் கச்சதீவை இந்தியா பெறவேண்டும்

## முதல்வர் ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாய்க்குக் கடிதம்



(புதுடில்லி)

கச்சதீவை இலங்கையிடம் இருந்து இந்தியா நிரந்தர குத்தகை என்ற அடிப்படையில் திரும்பப்பெறவேண்டும் எனக் கோரி தமிழக முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதா இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

1974-ம் ஆண்டு கச்சதீவு இலங்கைக்குரியது என ஒரு உடன்படிக்கையின் மூலம் இந்தியா ஒப்படைத்தது. இதனால்தான் தற்பொழுது இந்திய மீனவர்களின் துன்பங்களும் பிரச்சினைகளும் ஏற்படக் காரணமாகிறது.



இதன் பின்னர் தான் நூற்றுக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 325 மீனவர்கள் படுகாயமடைந்து

(10ம் பக்கம் பார்க்க)

# சர்வதேசப் படையைக் கொண்டுவர கண்காணிப்புக்குழு சூழ்ச்சி!

## சாடுகிறார் ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு அமைதிப்படை ஒன்றை நிலை நிறுத்தும் சதித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு வருவதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவிததுள்ளார்.

இலங்கையில் தமிழீழம் என்றொரு தனிநாட்டை உருவாக்கும் சூழ்ச்சியுடனேயே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குற்றம் சாட்டப்பட்டுள்ளது.அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

1983-ம் ஆண்டு இடம் பெற்ற இனக் கலவரத்தைப் போன்று மற்றொரு கலவரத்தை ஏற்படுத்தி சர்வதேச சமாதானப் படையை இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

இந் நிலையில் விடுதலைப் புலிகள் உடன்பாடுகளை மீறுவதாகத் தெரிவித்து சர்வதேச அமைதிப்படை ஒன்றை இலங்கைக்கு வரவழைக்கும் சூழ்ச்சியை நோர்வே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஆரமபித்திருக்கிறது.

இச் சூழ்ச்சித் திட்டத்தை முறியடிப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட முன்வரவேணடும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(த)

# குரங்குப்பாஞ்சான் முகாமை புலிகள் அகற்ற வேண்டும்

## ஒஸ்ரின் பெர்ணான்டோ வேண்டுகோள்

(கொழும்பு)

திருகோணமலை கிண்ணியா குரங்குப்பாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாமை அகற்றுவதற்கு முன்வர வேண்டும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

குரங்குப்பாஞ்சான் முகாம் அகறறப்படுவது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் தெரிவித்திருப்பதாவது;

ஜப்பானில் நடைபெற்ற 6-வது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முடிவுகளை இருசாராரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்கு அமைவாக விடுதலைப் புலிகள் நடந்து கொள்ள வேண்டும்.

குரங்குப்பாஞ்சான் முகாம் தொடர்பான விடயங்களை எதிர்க் கட்சிகளும அரச ஊடகங்களும் எதிர்த்து வருகின்றன.இந் நிலையில் முகாம் அகற்றப்படுவது தொடர்பாக விடுதலைப புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நல்லதொரு முடிவை எடுப்பார்என்றும் நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(வ)

# யுனெஸ்கோவின் ஏற்பாட்டில்
# ஊடகவியலாளர் கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

யுனெஸ்கோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான மூன்றுநாள் பயிற்சிக் கருத்தரங்கு இன்று முதல் மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கான தொடர் பயிற்சித் திட்டத்தை அமுல் படுத்தும் ஐக்கிய நாடுகள் கல்வி அறிவியல் மற்றும் கலாசார பெருமன்றமான யுனெஸ்கோவின் ஏற்பாட்டின் கீழ் இப் பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பத்திரிகைத் துறையில் ஏற்பட்டுள்ள நவீன வளர்ச்சிகளை அறிமுகப்படுத்தி வளர்ந்து வரும் சமூக விஞ்ஞான சூழல்களுக்கு ஏற்ப சிறப்புடன் பத்திரிகைத் துறையில் பணியாற்ற உரிய வசதிகளையும் பயிற்சிகளையும் அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அடுத்த ஆறுமாதங்களில் தமிழ் ஊடகவியலாளர்களுக்காக 12 பயிலரங்குகள் நடத்தப்படும். புகைப்படக்கலை, இணைய வசதிகள் உட்பட பல துறைகளில் சர்வதேச, தேசிய நிபுணர்கள் துணையுடன் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இந்தத் தொடர் பயிற்சிகளின் முதலாவது பயிலரங்கு இன்று முதல் ஞாயிற்றுக்கிழமை வரை யாழ். பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெறவுள்ளது. தொடக்க விழாவில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, தினக்குரல் ஆசிரியர் ஆ.சிவநேசற்செல்வன் உதயன் ஆசிரியர் என்.வித்தியாதரன் நமது ஈழநாடு ஆசிரியர் ரகுராம், வலம்புரி ஆசிரியர் விஜயசுந்தரம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த இளையதம்பி தயாநந்தா, பத்திரிகையாளர் ஜீவகதாஸ் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

மூத்த பத்திரிகையாளர்கள் ஏ.ஜெ. கனகரட்ணா, எஸ்.பெருமாள், ஈ.ஆர். திருச்செல்வம், கதிர்காமத்தம்பி ஆகியோர் தலைமையில் ''ஆரோக்கியமான சமூகமும். ஆரோக்கியமான ஊடகச் சூழலும்'' என்ற பொருளில் கலந்துரையாடலுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூத்த பத்திரிகையாளர் இ.பி.டேவிட்ராஜா, எழுத்தாளர் அ.ஜேசுராசா, கல்வியாளர் கோகிலா மகேந்திரன், அருட்திரு ரூபன்மரியாம்பிள்ளை, பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் ஆகியோரும் இந்தப் பயிலரங்கில் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

நிறைவு விழாவில் கலந்து கொண்டு சான்றிதழ்களை யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் வழங்குவார்.


யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 60 பத்திரிகையாளர்கள் இந்தப் பயிலரங்கில் பயிற்சி பெறவுள்ளனர்.

'தமிழ் பத்திரிகைகளில் ஜனநாயகக் கடமைகளும் சவால்களும்' என்ற பொருள் பற்றி இந்தத் தொடரின் முதலாவது பயில் அரங்கில் விவாதங்கள் எழுப்பப்படும்.

இப பயிலரங்கில் ஜனநாயக சவாலகளும் கடமைகளும் தகவலைப் பெறுவதிலும்-வெளியிடுவதிலும் உள்ள சவால்கள், நல்லாட்சிக்கான சவால்களும் கடமைகளும் ஆகிய மூன்று கருத்துக்கள் பற்றி பத்திரிகையாளர்கள் மூன்று குழுக்களாகப் பிரிந்து விவாதம் செய்து அறிக்கையும் சமர்ப்பிப்பார்கள்.

டென்மார்க் நிதியுதவியுடன் யுனெஸ்கோவின் ஏற்பாட்டில் இந்தப பயிலரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.





நேற்றைய தினம் வடக்கு கிழக்கு மாகாண தமிழ்தினப் போட்டியில் பங்கு பெற்றுவதற்கு வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலய மாணவர்கள் பேருந்தில் வருவதையும் (படம்-1) அதில் வந்த ஆசிரியர்கள் (படம்-2) அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி மாணவர்கள் (படம்-3) நிற்பதையும் படங்களில் காணலாம்.

## 474 இந்து ஆலயங்கள் இற்றைவரை புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த இரு தசாப்தங்களாக இடம பெற்ற போர் காரணமாக யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த 474 இந்து ஆலயங்கள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் விஷேட திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு முதல் இற்றை வரை பிரதேச செயலர் பிரிவு ரீதியாக புனரமைக்கப்பட்ட ஆலயங்களின் எண்ணிக்கை வருமாறு;

தெல்லிப்பளை-17, உடுவில்-26, கோப்பாய்-32, சங்கானை-56, சண்டிலிப்பாய்-28, யாழ்ப்பாணம்-20, நல்லூர்-46, ஊர்காவற்துறை-33, வேலணை-27, நெடுந்தீவு-3, சாவகச்சேரி-84, மருதங்கேணி-4, பருத்தித்துறை-51, கரவெட்டி-47.

(உ)

## மிகைக் கட்டணம் அறவிடத் தடை

(கொழும்பு)

மின்சாரக் கட்டணங்கள் தொடர்பான பற்றுச் சீட்டுக்கள் கிடைத்து 15 நாட்களுக்குள் கட்டணத்தைச் செலுத்தாதவர்களிடம் இருந்து 2 சதவீத வட்டி அறவிடும் தீர்மானத்தை உடனடியாக ரத்து செய்யுமாறு எரிபொருள் மின்சக்தித் துறை அமைச்சர் கருஜெயசூரியா மின்சாரசபையை பணித்துள்ளார்.

இதற்கமைய மிகைக் கட்டணம் அறவிடும் முறை நிறுத்தப்பட்டுள்ளது.

மாதாந்த மின்சாரக் கட்டணங்களை 15 நாட்களுக்குள் கட்டத் தவறின் பட்டியலில் குறிப்பிடப்பட்ட மின கட்டணத்தின் 2 வீதத்தை வட்டியாக அறவிட இலங்கை மின்சாரசபை தீர்மானித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (தி)

## அபிவிருத்தி லொத்தர் சபை
## கைமாற்றம் குறித்து ஜனாதிபதி சபாநாயகருக்கு அறிவிக்கவில்லை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான எந்த ஒரு கேள்விக்கும் விடையளிக்கும் பொறுப்பு விஞ்ஞான தொழில் நுட்ப பொருளாதார மறுசீரமைபபு அமைச்சுக்கும் கொள்கை அமுலாக்கல் பிரதி அமைச்சருக்கும் உண்டென சபாநாயகர் யோசப் மைகல் பெரேரா நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மக்கள் பிரதிநிதியாகிய விமல சிறி ஜயசிங்க நேற்றுப் பாராளுமன்றத்தில முன்வைத்த கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் மிலிந்த மொறகொட பதில் அளிக்க முனைந்த சமயம் எதிர்க் கட்சியினர் இடை மறித்தனர். இதனையடுத்து, அங்கு விளக்கமளித்த சபாநர்யகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டதுடன் அபிவிருத்தி லொத்தர் உள்ளிட்ட அமைச்சுப் பொறுப்புக்கள் யாவும் மிலிந்த மொறகொடவிடம் இருந்து மாற்றப்பட்டுள்ளதாக ஜனாதிபதி இன்னும் தனக்கு அறிவிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபை ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதால் இதற்குப் பதில் அளிக்கும் பொறுப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கு கிடையாது என பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே அங்கு வாதிட்டார்.

எனினும், சம்பந்தப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் வாய்ப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கு வழங்கப்பட்டது. (தி)

## இருட்டில் மூழ்கும் தீவகம்

(வேலணை)

வேலணை பஸ் நிலையம், வங்களாவடி, பழைய பஸ் கொம்பனியடி, துறையூர் போன்ற அதிகளவு மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி வீதிகள் இருளில் மூழ்கியுள்ளன.

குறிப்பாக வங்களாவடிப் பகுதிகளில் பொருத்தப்பட்ட தெரு விளக்குகள் பழுதடைந்து பல நாட்களாகியும் இதனைப் புதுப்பிக்க இதுவரை வேலணை மின்சார சபையினர் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் திருடர்களினதும் மதுவெறியர்களினதும் தொல்லைகளினால் பொது மக்கள் துன்பமடைகின்றனர். (உ-47)

## துடுப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நொதேன் விளையாட்டுக்கழகத்தின் 25-வது நிறைவையொட்டியும் பரராஜசிங்கம் ஞாபகார்த்தமாக நடத்தப்படும் பராவெற்றி கிண்ண மாபெரும் துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3.15 மணிக்கு நல்லூர் செங்குந்தா விளையாட்டு மைதானத்தில் விக்றி விளையாட்டுக் கழகம் எதிர் பற்றீசியன் விளையாட்டுக்கழகமும்

தொடர்ந்து 4.45 மணிக்கு யாழ். விளையாட்டுக்கழகமும் எதிர் ஈச்சமோட்டை விளையாட்டுகழகமும் மோதவுள்ளன. (உ-10)

* * *

(யாழ்ப்பாணம்)

விவேகானந்தா விளையாட்டு கழகம் நடத்தும் 20 ஓவர்களை கொண்ட 11 பேருக்கான மென்பநது துடுப்பாட்ச் சுற்றுப் போட்டியில் நாளைய தினம் பி.ப.3.30 மணிக்கு வி.எஸ். மைதானத்தில் தொண்டமானாறு விளையாட்டு கழகம் எதிர் உடுப்பிட்டி உதயதாரகை விளையாட்டுக் கழகமும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் ஸ்பேர்ஸ் ஏ விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (உ-10)

## கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி தெற்கு சன சமூக நிலையத்தின் 48 ஆவது நிறைவு விழாவை முன்னிட்டு மின்னொளி விளையாட்டுகழகத்தால் நடத்தப்படும் செற்றப் முறையிலான கரப்பந்தாட்ட போட்டியில் இன்று இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டு கழகத்தை எதிர்த்து மட்டுவில் கலைவாணி விளையாட்டு கழகமும் தொடர்ந்து 4.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மட்டுவில் பாரதி விளையாட்டு கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (5)

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் குமர கோட்டம் சனசமூக நிலையத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியினை முன்னிட்டு நடாத்தப்படும் இல்லங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப. 3.30 மணிக்கு காந்தி இல்லத்தை எதிர்த்து பாரதி இல்லம் மோதவுள்ளது. (த-5)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(கோப்பாய)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டுப் போட்டி இன்று பி.ப.2.30 மணிக்கு நிலை முன்றலில் சனசமூக நிலையத் தலைவர் மு.முருகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச சபை விசேட ஆணையாளர் வெங்கடாசலமும் சிறப்பு விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் சி.ரஞ்சன்பாபு, தமிழர் புனர்வாழ்வு கழக மாவட்டப்பணிப்பாளர் சு.ஜெயராஜ், கோப்பாய் மத்தி கிராம அலுவலர் ஜோசப் ரட்ணராஜா, கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் வை.குணசேகரம் வலி கிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.யாழவன் ஆகியோரும் கெளரவ விருந்தினர்களாக சிவஸ்ரீ சண்முகராஜேஸ்வரக் குருக்கள் சிவஸ்ரீதானேஸ்வரக்குருக்கள் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-79)

## 81 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன் சிப் போட்டிகள் இன்று கொழும்பில் ஆரம்பம்

81 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன் சிப் போட்டிகள் கொழும்பு சுகததாச விளையா ட்டு அரங்கில் இன்று முதல் மூன்று நாட்களுக்கு இடம் பெறவிருக்கின்றன.

இப்போட்டிகளில் முதன் முறையாக சிங்கப்பூர், மலேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய வெளிநாட்டு வீர வீராங்கனைகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டிகளின் போது சாதனைபடைக்கும் இலங்கை வீரர்களுக்கு பெருமளவு பணப்பரிசுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை மெய்வல்லுநர் போட்டி வரலாற்றில் அதிக பணப்பரிசு வழங்க திட்டமிடப்பட்டிருக்கும் போட்டி நிகழ்வாக இது ஒழுங்கமைத்திருப்பதாகவும் எதிர்காலத்தில் இலங்கை வீர வீராங்கனைகளுக்கு அனுசரணை வழங்கவும் இலங்கை மெய்வல்லுநர் சங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-68)

## கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு எதிராக சட்ட நடவடிக்கை
## தயாராகிறார் குரூஸ்னர்

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ற் தொடரின் தென்னாபிரிக்க அணிககான தெரிவின் குழுவில் தமக்கு இடம் அளிக்கப்படாமை ஆச்சரியத்தையும் கவலையையும் அளிப்பதாக தென்னாபிரிக்க சகல துறையாட்டக்காரர் லான்ஸ் குரூஸ்னர் தெரிவித்திருக்கிறார்.

இங்கிலாந்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் போது தம்மைத் தெரிவு செய்வதாக வழங்கப்பட்ட உறுதிமொழியின் காரணமாக தாம் பிராந்திய அணிகளில் ஒப்பந்தம் செய்வதற்கான வாய்ப்புகளை நிராகரித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கெதிராக தாம் சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாக குரூஸ்னர் கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

8 வருடங்களாக முழுத்திறமையையும் வெளிப்படுத்தி தென்னாபிரக்காவிற்காக விளையாடிய தனக்கு லோட்ஸ் மைதானத்தில் மீண்டும் விளையாட இடம் கிடைக்காதா என ஏங்கியதாகவும் 31 வயதான குரூஸ்னர் கவலைப்பட்டு குறிப்பிட்டிருக்கிறார். (உ-68)

# ஆயிரக்கணக்கில் அத்துமீறிப் புகுந்த

# இந்திய மீனவரின் இழுவைப் படகுகள் வடமராட்சிக் கடலில ஆக்கிரமிப்பு

## கடற்றொழிலுக்குச் சென்ற எம்மவர்கள் ஏமாற்றம் கையறு நிலையில் இரவிரவாக கடலில் தவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சிக் கடற்பரப்பில் அத்துமீறிப் புகுந்த சுமார் 2 ஆயிரம் வரையிலான இந்திய மீனவரின் இழுவைப் படகுகள், அங்கு அடாத்தான முறையில் மீன்பிடியில் ஈடுபட்டதால், தொழிலுக்குச் சென்ற வடமராட்சி மீனவர்கள் பின்வாங்கும் நிலை ஏற்பட்டது.**

நேற்று முன்தினம் இரவு தொழிலுக்குச் சென்ற வடமராட்சி மீனவர்களுக்கு ஏற்பட்ட இந்தத் துர் அனுபவம் குறித்து வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் ப.சூரியகுமார் விபரிக்கையில்,

வழமைபோன்று தொண்டைமானாறு முதல் மணற்காடு வரையான கடலுக்கு தொழிலுக்காக எமது மீனவர்கள் சென்றபோது அங்கு சுமார் 2 ஆயிரம் வரையிலான இந்திய இழுவைப் படகுகள் ஆக்கிரமித்திருந்தன.

இவை எமது கடல் வளங்களைச் சுரண்டும் கைங்கரியத்தோடு மட்டும் நின்றுவிடாது, எமது மீனவரின் உபகரணங்களையும் மனிதாபிமானமற்ற முறையில் சேதமாக்கும் செயலில் ஈடுபட்டிருந்தன.

அத்துடன், இந்திய மீனவர்கள் தொழிலுக்குச் சென்ற எம்மவரை மிரட்டியதுடன், விரட்டிக் க்லைத்தனர்.

இதனால், அவர்கள் பின்வாங்கி கரை திரும்ப வேண்டியதாயிற்று. இருப்பினும், இரவு வேளைகளில் கரை திரும்ப முடியாது என்ற படையினரின் கடுமையான உத்தரவினால் அவர்கள் மிகுந்த மன உளைச்சலுடன் கடலிலேயே இரவுப் பொழுதைக் கழித்துவிட்டு விடியற் காலையிலேயே வீடு திரும்ப முடிந்தது.

இரவு 8 மணி முதல் நள்ளிரவு வரையில் இந்திய இழுவைப் படகுகள் எமது கடலில் நிலை கொண்டதால் எமக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த இழப்பின் பெறுமதி இலட்சக்கணக்கையும் தாண்டியது.

நீண்ட காலமாக இடம்பெற்று வரும் இவ்வாறான செயல்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னராவது தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்தோம். ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

சம்பந்தப்பட்ட எவரும் இது விடயத்தில் எமக்கு உருப்படியான தீர்வைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையை நாம் இழந்து விட்டோம்.

இந்த நிலையில், இது விடயத்தில் எவரது ஆலோசனையையும் நாம் பெறத் தயாரில்லை.

இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை நாமே மேற்கொள்வது என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு இவ்வாறான சம்பவங்கள் எம்மைத் தூண்டியுள்ளன.

இனி எவரது வார்த்தையையும் நம்பி நாம் ஏமாறவோ பொறுமை காக்கவோ தயாரில்லை என்றார் உணர்ச்சி பொங்க. (உ)



அண்மையில் மாமுனை அ.த.க. வித்தியாலயத்தில் கல்வி கற்று வீரச் சாவடைந்தவர்களுக்கான அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. கல்லூரி அதிபர எஸ்.சிறிராமச்சந்திரன் அஞ்சலியுரை ஆற்றுகிறார்.

# காணி உறுதிச் சட்டமூலம் விரைவில வர்த்தமானியில்

## காணி அமைச்சர் உறுதிமொழி

(கொழும்பு)

காணி உறுதிச் சட்டமூலம் இம்மாத இறுதிக்குள் வர்த்தமானியில் வெளியீட்டப்படும் என காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர்,

கடந்த காலங்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த ஆட்சேபம் காரணமாக அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பான சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாமல் போயுள்ளது.

இன்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை.

ஆதலால் இனிமேலும் காணி உறுதிச் சட்ட மூல அமுலாக்கத்தை தாமதப்படுத்த முடியாது. காணி உறுதிச் சட்டமூலத்தில் ஜனாதிபதி தனது கையொப்பத்தை இடுவது குறித்தும், ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் அவரின் ஒப்புதலுக்கு முரணான விடயங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

காணிகள் தொடர்பாக மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களுக்கும், நகல் சட்டமூலத்தின் உள்ளடக்கத்திற்கும் இடையில் முரண்பாடுகளை ஜனாதிபதி செயலகம் கூறியிருந்தது.

ஆனால் இவ்விடயத்தில் மாகாண சபைகளுக்கும் அதிகாரம் இல்லையென உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சரவையுடனும் ஏனைய அங்கத்தவர்களினதும் உடன்பாட்டுடன் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் சட்டமூலத்தை நிறைவேற்றி அதனை வர்த்தமானியில் வெளியிடப் போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)



கடற்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வடமராட்சி கிழக்கில் வீரச் சாவடைந்தோர் நினைவாக இடம்பெற்ற அஞ்சலிக்கூட்டத்திற்கு கடற்புலிகளின் வடமராட்சி கிழக்குப் பொறுப்பாளர் யாழ் மன்னன் உரையாற்றுகிறார்.

### முழுநாள் கருத்தரங்கு

(சில்லாலை)

யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்ற நடு நிலையத்தில் இன்றுமுதல் அடுத்துவரும் 3 தினங்கள் கிராமியக் குழுக்களுக்கான விசேட முழுநாள் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

கியூடெக் நிறுவனத்தின் கிராமியக் குழுக்களின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஏனைய நிறுவனங்களின் செயற்பாடுகளை அவர்களுக்கு தெரியப்படுத்தும் நோக்குடன், நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இதில் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.(உ-58)



இந்து இளைஞர் மன்றத்தால் சமய தொண்டு நிகழ்வாக வியாபாரி மூல இன்பர்சிட்டி சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற சிரமதானத்தின் போது

# பீரிஸிற்கு எதிரான மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

(கொழும்பு)

அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவினால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு, நேற்று முன்தினம் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மனுவில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பாராளுமன்றப் பொதுசெயலாளர் உட்பட ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பல பிரதிநிதிகள் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

காணி சம்பந்தமான கொடுக்கல் வாங்கல் ஒன்றில் குற்றவாளியாகக் காணப்படுவதால், அமைச்சரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுந்தவர் அல்ல என அம்மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்மனு காலம் தாழ்த்தி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதனை நிராகரிக்குமாறு அமைச்சர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி றுபேஸ் டி.சில்வா நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார். (தி)

### இலவச கல்விக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தீவக வலயத்திற்குட்பட்ட தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணி முதல் பி.ப.4 மணி வரை காரைநகர் இந்துக்கல்லூரி ஆரம்பப் பாடசாலை பிரதான மண்டபத்தில் மேல்மாகாண ஆசிரிய ஆலோசகர் த.அம்பிகைபாகனால் நடாத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் புலமைப் பரிசில் கையேடும், விடைகளுடன் கூடிய மாதிரி வினாத்தாள்களும் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

காரைநகரைச் சேர்ந்த சகல தரம் 5 மாணவர்களையும், ஏனைய தரம் 5மாணவர்களையும் பங்குகொண்டு பயன்பெறுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.வேணுகோபால் கேட்டுள்ளார். (உ-8)



வல்வெட்டித்துறை அம்மன் கோவிலடியில் படையினரால் யுத்த காலத்தில் அழிக்கப்பட்ட வீடுகளையும், மீளவும் குடியிருக்க கல்வீடு இருந்த இடத்தில் மணல் வீடு அமைக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

படங்கள்: வே.தவச்செல்வ

## இன்று ஒரு தகவல்

# தாவர இயல்புகள்

அலுவலகம் முடிந்தால் எல்லோரும் வீட்டுக்குத்தான் செல்வார்கள். ஆனால் எனக்குத்தெரிந்த ஒருவர் என்னசெய்வார் தெரியுமா? நேராக ஏதாவது ஒரு பூங்காவிற்கு போவார். மரத்தடியில் சிறிது நேரம் படுத்திருந்துவிட்டுப் பின்னர்தான் வீட்டுக்குச் செல்வார். ‘‘ஏன் இப்படிச் செய்கின்றீர்கள்?’’என்று கேட்டால் ‘‘அங்குதான் எனக்கு நிம்மதி என்பார்கள் .’’ சில நேரங்களில் மனிதர்கள் நிம்மதியைத் தேடிப் பூங்காவுக்குச் செல்வார்கள். நிரந்தரமான நிம்மதியைத்தேடி இறுதியில் சுடுகாட்டுக்குப் போவார்கள். காடும், பூங்காவும் நம் கண்களுக்கு அமைதி தரும் இடமாகத் தோன்றுகின்றது. ஆனால் அங்கு உள்ளுக்குள்ளேயே தீவிரமானதோர் யுத்தம் நடந்து கொன்டிருக்கிறது. மரமும், செடியும், கொடியும் நமக்கு நிம்மதியைக் கொடுக்கின்றன. ஆனால் அவை நிம்மதியாக இல்லை. உயிர் பிழைப்பதற்கு தீவிரமான போராட்டம் அங்கு நடக்கின்றது.

இது சம்பந்தமான விபரங்களை கண்டுபிடிக்கும் போது விஞ்ஞானிகளே ஆச்சரியப்பட்டுப் போகின்றனர். தாவரங்கள் வேதியல் என்ற பொருளைப் பயன்படுத்தி எதிரிகளை விரட்டியடித்து நண்பர்களைப் கவர்ந்திழுக்கின்றன. ஒருதாவரத்திற்குப் போட்டியாக வேறோர் தாவரம் வளருகின்றதாயின் விஷேசமான வேதியல் பொருளை உபயோகப்படுத்தி அதனை விரட்டியோ அழித்தோ விடும்.

இந்தவகையில் தாவரங்களின் சாதுர்யம், சமயோஜிதம், சாமர்த்தியம் இவற்றைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக இருக்கும். இவற்றைப் பற்றி ஆராய்வதற்கு ‘‘அல்லேலோபதி’’ (Allelo pathy) என்று ஓர் புதிய அறிவியல் துறையே உருவாகியுள்ளது. ஒரு செடியிடம் சென்று ‘‘ஏன் இப்படி அடித்துக் கொள்கின்றீர்கள்?’’ என்று கேட்டால், அது என்ன கூறும் தெரியுமா? அதற்கு வாய் இருந்தால் இப்படித்தான் கூறுமாம். உங்களுக்கு எனன? இலகுவாகக் கூறிவிட்டீர்கள் எங்கள் கஷ்டம் எங்களுக்குத தான் தெரியும். பிராணிகளுக்கு ஒரு ஆபத்து வந்தால் அவை ஓடிப் போய்விடும். பறவையாக இருந்தால் பறந்துபோய்விடும். எலி வளைக்குள் போய்விடும். நாம் என்ன செய்வது? சுவற்றில் ஆணி அறைந்தது போல் நிலத்திலேயே நின்று கொண்டிருப்போம். எங்களால் ஓடமுடியுமா? நகரமுடியுமா? நின்ற இடத்தில் தான் உணவைத் தேடவேண்டும். இருந்த இடத்தை விட்டு அசையாமல் தான் எதிரியிடமிருந்து எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். இவ்வாறு புலம்ப ஆரம்பித்து விடும். அதுவும் நியாயம் தானே.

தாவரங்கள் உயிர் வாழ்வதற்காகவும், இனம் பெருக்குவதற்காகவும் சில ஆயுதங்களை வைத்திருக்கின்றன. முள், செதில் இவை தான் ஆயுதங்கள். தற்காப்புக்காகச் சில இரசாயனங்களையும் வைத்திருக்கின்றன. தாவர நஞ்சுக்கள் சில உண்டு. Phytotoxins ஒலியாண்டர் (Oleander) என்று ஓர் புதர்ச் செடி. அதன்சாறு கொடிய விஷம். அதன் ஒரு இலையைத் தின்றால் கூட போதும் மனிதன் இறந்து விடுவான். மிசில்டோ (Mistletoe) என்று ஓர் செடி. இதன் ஒரு பழத்தை உண்டால் மாடு இறந்து விடும். இது போன்று நிறைய விஷச்செடிகள் காடுகளிலும் வயல்களிலும் உண்டு.

தாவரங்கள், போட்டியாக வளரும் தாவரத்தை அழிக்க களைகொல்லி போன்ற இரசாயனத்தைப் பயன்படுத்துகின்றன. பூச்சிகளை விரட்ட பூச்சிக்கொல்லி மாதிரியான இரசாயனங்களை உண்டாக்குகின்றன. ஆனால் ஒரு தாவரம் தன் எதிரியை கொல்லத்தான் வேண்டும் என்றில்லை. எதிரியைப் பலவீனப்படுத்துவதுடன் சரி. புகையிலைச் செடி நிக்கொட்டினை உற்பத்தி செய்யும். அந்த வாசனை பட்டால் வண்டுகள் செயலிழந்து வடும். ஒக், பைன் போன்றவற்றின் இலைகளில் டனில் (Tannin) நிறைய உள்ளது. சகபட்சினிகள் அதன் இலைகளைத் தின்றால் அவ்வளவு தான். அதிலுள்ள டானிக் அமிலம் அவற்றின் வயிற்றில் என்றும் மாற்றங்களை ஏற்படுத்தி ஜிரணிக்க முடியாது செய்து விடும். ஒரு பூச்சி ஒக் இலையைத் தின்று கொண்டிருந்தால் அதன் உடலுக்குத் தேவையான ஊட்டம் கிடைக்காது. வலுவிழந்து விடும். சில தாவரம் பூச்சிக்கு போதையை உண்டாக்கி விடும். இவை தவிர இனப்பெருக்கத்திற்காக சில இரசாயனங்களை உற்பத்தி செய்கின்றது.

மரங்கள் ஒன்றுக்கொன்று உதவி செய்வதும் உண்டு. சிவப்பு ஆல்டர் (Red Alder) என்று ஓர் மரம் வில்லோ (Willow) என்றோர் மரம். இந்த மரங்களை கம்பளிப்புழு தாக்கினால் இவை உடனே எச்சரிக்கை இரசாயனத்தைப் பரப்பி விடும். உடனே அருகிலுள்ள மரங்கள் உஷாராகி விடும். அவை தமது இலைகளில் கூடுதலான டனின்களை நிரப்பிக்கொள்ளும். இதனால் புழு, பூச்சிகளுக்கு அந்த இலையைத்தின்றும் ஆசையே போய் விடும்.

அதனால் மரம், செடி, கொடிகள் நிம்மதியாக இருப்பதாக எண்ணிக்கொண்டு அதைப்பார்த்து யாரும் பொறாமைப்பட வேண்டாம். அலுவலகம் முடிந்ததும் மரத்தடியில் சென்று அமரலாமா என்று நினைப்பவர்கள் இனித் துணிந்து போய் வீட்டிலேயே அமருங்கள். அப்படி ஏதும் ஆபத்து வந்தாலும் ‘‘மரமாக’’இருந்தால் ஓடமுடியாது. நீங்கள் தான் அப்படி இல்லையே?

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## இடைக்கால நிர்வாக திட்டவரைபு

# விபரங்களை தெளிவு படுத்துமாறு பிரதமரிடம் கோருகிறது மு.க.

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கென அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள திட்ட வரைபில் முஸ்லிம்கள் தொடர்பாக உள்ளடக்கப்பட்ட விபரங்களை தெளிவுபடுத்தவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசிடம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் பிரதமர் ரணில விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளதாக அக்கட்சியின் செயலாளர் எம்.ரி.ஹஸனவி தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில், விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட்ட திட்ட வரைபின் உள்ளடக்கம் சில ஊடகங்களில் வெளியானது. ஆனால், அவற்றில் எமது கட்சி பேச்சு நடத்தி அரசுடன் இணக்கம் காணப்பட்ட சில விடயங்கள் விடுபட்டுள்ளது எனத்தெரிய வந்துள்ளது.

எனவே இதன் உண்மை நிலை விளக்குமாறும் கேட்டுள்ளோம். இதற்கான பதில் கிடைத்த பின்னரே திட்டவரைபு தொடர்பான அபிப்பிராயங்களை வெளியிடயுள்ளோம் என்று தெரிவித்துள்ளார். (உ-8)

## ஜனாதிபதி அக்குரஸ்ஸ விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்று அக்குரஸ்ஸ தொகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு வீடு, வாசல்களை இழந்துள்ள அப்பகுதி மக்களுக்கு, வீடுகள் அமைதது்க்கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றிற்கான உதவிகளை வழங்கும வைபவத்திற்குத் தலைமை தாங்கவே ஜனாதிபதி அக்குரஸ்ஸ செல்லவுள்ளார்.

வெள்ள அனர்த்தத்தால் வீடு வாசல்களை இழந்தோருக்கான இவ் உதவி வழங்கும் வைபவம் வல்பிட்ட நில்வள கல்விக் கல்லூரியில் இன்று மு.ப. 10 மணிக்கு இடம் பெறவுள்ளது. (உ-18)

## இன்று நல்லூரில்

# குட்டி மணி, தங்கத்துரை நினைவஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ரெலோ ஏற்பாட்டில் ‘‘1983ஆம் ஆண்டு வெலிக்கடையில் கொல்லப்பட்ட வீரமறவர்களின் 20ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்’’ இன்று மாலை 5 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல அரசியல் கட்சிப் பிரமுகர்களும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், கலந்து கொள்ளவுள்ளனர்.

1983ஆம் ஆண்டு வெலிக்கடை வெஞ்சிறையில் கொடூரமான முறையில் தமிழ் ஈ.ழ. விடுதலை இயக்க (ரெலோ) ஸ்தாபகத் தலைவரான தங்கத்துரை, தளபதி குட்டி மணி மற்றும் முன்னணிப் போராளிகள், பொது மக்கள் என சுமார் 53 பேர் கொல்லப்பட்டமையும் இவ்வாறு கொல்லப்பட்ட தமிழ் தேசிய வீரர்களை நினைவு கூரும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் தமிழ் தேசிய வீரர்கள் தினத்தை, தமிழ் விடுதலை இயக்கம் கொண்டாடி வருகின்றமையும் இங்கு குறிப்பிடத் தக்கவை. (உ-10)

## இராசி பலன்

**25.07. 2003**

**(ஆடி09, வெள்ளி)**

ஏகாதசி - மு.ப. 9.21 வரை
ரோகிணி - பி.ப.4.39 வரை
இராகுகாலம்- 10.32-12.02
சுபநேரம்- 6.02-7.32
ஏகாதசி விரதம்

**மேடம்**
அதிகமான வார்த்தை, விருந்துபசாரம், உஷ்ணவியாதி, தன விரயம்.

**இடபம்**
ஜனவசியம், போசன சுகம், நல்ல முயற்சி, புத்தி சாதுரியம்.

**மிதுனம்**
உறவினர் சந்திப்பு, காரிய அலைச்சல், சயனசுகக்குறைவு, பிரயாணம்.

**கடகம்**
நினைத்தகாரியம் கைகூடும், நல்ல சம்பவம், உறவினர் வருகை, சிந்தனை மிகுதி.

**சிங்கம்**
இனிய நிகழ்வு, உற்சாகம், எடுத்த கருமங்கள் கைகூடும், புதிய முயற்சி.

**கன்னி**
தேசாந்திரவாசம், மனக்கட்டுப்பாடு, காரியதாமதம், ரோக பயம்.

**துலாம்**
எதிர்பாராத மனஸ்தாபம், தொழில் கஷ்டம், தன விரயம், திடீர் நன்மை.

**விருச்சிகம்**
பிறருக்கு உதவுதல், முயற்சி பலிதம், கலந்துரையாடல், குடும்ப சுகம்.

**தனுசு**
நோய் குணமடைதல், காரிய சித்தி, உறவினரால் நன்மை, பயணம்.

**மகரம்**
கௌரவக்குறைவு, குடும்பக்கவலை, சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம்.

**கும்பம்**
தொழில் விருத்தி, உடல் சோர்வு, மாதாசுகம், தெய்வ சிந்தை,

**மீனம்**
குடும்ப மகிழ்ச்சி, பிரயாண நன்மை, அன்னியர் உதவி, தனலாபம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## பாடசாலைக் கல்வியை முடித்த

# இளைஞர் யுவதிகளுக்கு ஒரு நாள் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் கல்விக்கும் பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனமும் ஜீ.ரி.சற் நிறுவனமும் இணைந்து நடாத்தும் பாடசாலைக்கல்வியை நிறைவு செய்துள்ள இளைஞர், யுவதிகளுக்கான ஒரு நாள் செயலமர்வு நாளை சனிக்கிழமை மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை பயிற்சி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

முயற்சியாண்மை, பொருத்தமான தொழிற்தெரிவு, திறன்விருத்தி, தற்போதைய யதார்த்த நிலை பற்றிய கருத்துரைகள் வழங்கப் படவுள்ள இச் செயலமர்வு, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் சி.ஈ. எவ்.ஈ.தொழில் அபிவிருத்திச் சபை தொழிற் திணைக்களம் ஆகியவற்றின் வள ஆளணியாளர்களால் நடாத்தப்படவுள்ளது. (உ-18)

# தினேஷின் நியமனத்தை நியாயப்படுத்துகிறார் பீரிஸ்

(கொழும்பு)

தேர்தல் சீர்திருத்தங்களை சிபார்சு செய்வதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு, மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த தினேஷ் குணவர்த்தனவை நியமிப்பது பாராளுமன்றத்தில் ஏற்கனவே நிலை பெற்றுள்ள நடைமுறைகளுக்கு ஏற்றதாகவே இருக்கிறது. இதற்கு முன்னுதாரணங்களுள்ளன. இது தன்னிச்சையான முடிபல்ல என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தல் சீர்திருத்தங்களை செய்தல் வேண்டும் என்று தினேஷ் குணவர்த்தனவே பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை முன் வைத்திருந்தார். என்பதுடன், அதனை அமைச்சர் கருஜயசூரியவும், அரசியல் சட்ட அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் பீரிசும் வழிமொழிந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நியமனம் பற்றி அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக இது போன்ற ஒரு தீர்மானத்தை முன்னைய எதிர்க்கட்சி எம்.பி யான மங்கள முனசிங்க பிரேரித்தார். அதனை அப்போது ஜனாதிபதியாகவிருந்த ஆர். பிரேமதாஸ ஏற்றுக்கொண்டு அவரையே அதன் தலைவராக நியமித்தார். அதனை ஏற்ற முனசிங்க பெறுமதி மிக்க பங்களிப்பை வழங்கியிருந்தார். இந்த முன்னுதாரணத்தைக் கொண்டே, தேர்தல் சீர்திருத்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு தினேஷ் குணவர்த்தனவை நியமிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

# குறுக்கு வழியில் பணம் சேர்த்தவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

லொத்தர் சீட்டுக்களின் இலக்கங்களை ஏற்றவாறு மாற்றி அமைத்து பல பரிசில்களை வென்று செல்வந்தராகியிருந்த ஒருவர், கடவத்தைப் பொலிஸரால் கைது செய்யப் பட்டுள்ளார். ஹோட்டல் அறை ஒன்றில் வாழ்ந்து வந்த இவரிடமிருந்து இரசாயனப்பொருட்கள் மற்றும் கணனி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இரகசியத்தகவல் ஒன்றின் பேரில் கடவத்தை பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாளக இவரை கைது செய்து விசாரித்தபோது, பல உண்மைகள் தெரியவந்துள்ளன. வெற்றிபெற்ற எண்களை இவர் சாதாரண சுவீப் ரிக்கற்றுகளில் பதித்து 10ஆயிரம் ரூபா வரையிலான பல பரிசுகளை பெற்றுவந்துள்ளார்.

இரசாயனப்பதார்த்தத்தைப் பாவித்து முதலில் இலக்கத்தை அழித்த பின், கணனியின் உதவியுடன் சரியான இலக்கங்களை ரிக்கற்றில் பதிந்து விடுகிறார்.

10 ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட பரிசுகளை உள்ளூர் முகவரிடமே இவர் வாங்க முடிந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இவரை விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீதவான் உத்தரவிட்டுள்ளார். (உ)

வெள்ளி முற்றம்

# உறவிழந்த பருவங்கள்

சந்தையில் ஆராவாரம் கலைந்து ஓரிருவர் மட்டுமே நடமாடிக்கொண்டிருந்தனர். சந்தையின் ஓர் ஒதுக்குப்புறமாக சிறுமி ஒருத்தி நடைப்பிணமாக அமர்ந்திருக்கிறாள். அவள் வாயிலிருந்து ''அம்மா பசிக்குது, பிச்சை போடுங்கள்'' என்ற பரிதாபக்குரல் எழுகிறது. அவள் அழுக்குப்படிந்த கந்தலாடையுடன் தலைமயிரோ அழுக்கு மீதியால் எண்ணை இன்றி ஒட்டியுலர்ந்து முகத்திலே பசிமேலிடப் பரிதாப நிலையில் காட்சி தருகிறாள். அவளொரு சிறுமி என்ற நிலையில் இன்பதுன்பங்களை வேறு பிரித்தறியமாட்டதாவளாகத்தான் காணப்படடாள. இத்தனைக்கும் அவள் குதூகலத்தைக் கலைக்கும் ஓர் ஒட்டுண்ணி பட்டினி என்பதை என்னால் உணரமுடிகிறது. அவளைப பட்டினியால் தவிக்கவிட்டு அவளது உறவுகள் எங்கே மறைந்து போய் விட்டன. அல்லது அவளுக்கென ஒரு உறவினரே கிடையாதா?

''இல்லாதவரைக் கண்டால்
உள்ள உறவும் ஓடிவீடும்-ஏதும்,
உள்ளவரை கண்டால
இல்லாத உறவும் கூடி விடும்.''

என்ற கவி வரிகளை எங்கோ படித்த ஞாபகம் ஆம், அவள் இப்போது ஓர் அநாதைச்சிறுமி. இவளுக்கு சிறு வயதிலிருந்தே உண்பதற்கு உணவு கொடுக்க ஒரு உறவின்றித் தவிக்க இவள் மட்டும் ஏழ்மைக்கு ஒரு விதிவிலக்கா? அல்லது. எதிஜோப்பியாவின் மறு வடிவம் இவள்தானா?

அவள் அருகில் சென்று ஓரிரு வார்த்தைகளேனும் பேச வேண்டும் போலிருக்கிறது. நான் கதைத்தாலும் அவளால் பதில் கூற முடியுமா? அவளது ஒட்டிஉலர்ந்த வயிற்றுக்கு ஒருபிடி அன்னமிட்டால் மட்டுமே அவளால் பேசமுடியும். ஆனால், நான் நிற்கும் இடமோ நணபகறசந்தை. அவளை விட்டு விலக முடியாது என் மனமும் அவள் மீதே தாவுகிறது. அவளைத் தாண்டி மறு கடைக்குச் செல்கிறேன் அங்கு எனக்குத் தேவையான பொருட்கள் எல்லாம் வாங்கிவிட்டேன். மீதியாக என்கையில் எஞ்சியிருப்பது, ஐந்து ரூபா மட்டும் தான். இதை அவளிடம் கொடுக்கவா?விடவா? மனதிலே கேள்வி இரட்டித்துக் குழப்பமாக இருக்கிறது. அந்த ஐந்து ரூபாவைக் கொடுப்பதால் அவள் வயிறு நிறையுமோ? நினைக்கவே,மூளைக்கும் முன்னாணுக்குமிடையே குருதியோட்டம் துண்டிக்கப்பட்டு விடும்போல் இருக்கிறது. அருகிலே ஒரு சிறுவன் வாழைப்பழம் விற்றுக்கொண்டிருக்கிறான். அவனிடம் சென்று ஐந்து ரூபாவை நீட்டி வாழைப்பழம் வேண்டிக்கொண்டு வந்து அவளிடம் கொடுக்கின்றேன்.பசியின் கொடூரம் தாங்காது அவ்வளவு பழத்தையும் உரித்து வாய்க்குள் திணிககிறாள். அவள் வயிறுகுளிர என்மனமும் குளிர்கிறது. அவள் சாப்பிட்டு முடிந்த பின் முகத்தைப்பார்க்கிறேன். அவள் முகத்தில் நன்றியுணர்வு மேலிட சிறு புன்னகை தவழ்கிறது.

இனி, அவளிடம் கதை கேட்டால் நிச்சயமாகப் பதில் கூறுவாள். என் மனதில் நம்பிக்கையுணர்வு வெளிப்பட அவளிடம் கதை கேட்க ஆரம்பிக்கிறேன்.

தங்கச்சி, உங்கட அம்மா, அப்பா எங்க? திடீரென அவள் கண்களிலிருந்து நீர்த் துளிகள் அரும்புகின்றன. நான் அவளிடம் அவ்வாறு கேட்டது தவறா? அவள் மனதைக் கீறிக் காயப்படுத்திவிட்டேனா? பயத்தால் மனம் தடம்புரழ்கிறது. அவளைச் சமாதானப்படுத்த முயல்கிறேன். அவுளது பிஞ்சு மனம் ஆறவில்லை. என்ன செய்வதெனத் தெரியாது மௌனி



யாகிவிடுகின்றேன். சில நிமிடங்களில் அவளது ஏழ்மை உணர்வுகள் என்னுடன் பேச்சை ஆரம்பிக்கின்றன. ''நான் ரண்டாமாண்டு படிக்கேக்க அம்மாவும்,அப்பாவும் ஷெல் விழுந்து செத்திட்டினம்.அப்ப நான் தனிய நிண்டு அழ ஆரோ ஓராள் தன்னோட வரச் சொல்லிக் கூட்டிக் கொண்டு போனவர். அவயின்ர வீட்டை நான் தான் எல்லாவேலையும் செய்ய வேனும் இல்லாட்டா என்னை அடிப்பினம். பிறகு இடம்பெயர்ந்து போக்கேக்க, எங்களுக்கே இருக்க வீடு கிடைக்குதோ தெரியாது.நீ எங்களோட வர வேண்டாமெண்டு சொல்லிப்போட்டினம்.பிறகு நான் பசி யெடுக்கும் நேரமெல்லாம் பிச்சை கேடகத்தொடங்கி, இப்ப இப்பிடி இருக்கிறேன்'' என்று தளதளத்த குரலால் தன் பிஞ்சுப்பருவ அவஸ்தையைக் கூறிமுடித்தாள். அவள் இவ்வளவு நேரமும் கூறியது, அவள் நாவுக்கு எட்டியவை மட்டும் தான். அவள் மனதில் இன்னும் எத்தனை காயங்கள் பதிந்துள்ளனவோ?

காலம் கடந்து கொண்டிருந்தது. சில வருடங்களின் பின்....பெற்றோரை இழந்த,வறுமையில் வாடி வதங்கும் ஏழைச் சிறார்களுக்கென நிறுவப்பட்ட, ''அன்னை இல்லத்தில்'' நானும ஒருவனாக இணைந்து சேவையாற்றிக் கொண்டிருந்தகாலம்,

ஒரு நாள் பஸ் தரிப்பிடத்தில் பஸ்ஸிற்காக காத்து நின்றேன். சன நடமாட்டம்,வாகன இரைச்சல், வியாபாரிகளின் கூச்சல் என ஒரே அல்லோலகல்லோலமாயிருந்தது. நானும் சாதாரணமாக சகல நிகழ்வுகளையும் கண்ணோட்டம் விட்டபடி நின்றிருந்தேன். திடீரென என் பார்வை ஓர் ஓரமாய்த் திரும்பியது. அன்று சந்தித்த அதே சிறுமி; அதே கந்தலாடை; அதேகோலம் காலம் மட்டும் தன் கடமையைச் செய்யத் தவறவில்லை. முகத்தில் மட்டும் வயது காட்டியது. பன்னிரண்டு, பதின் மூன்று வயதை எட்டியிருப்பாள். உணர்வுகளின் ஓட்டத்தால் கால்கள் அவளிருந்த இடத்தை நோக்கி அசைகின்றன. அவளுக்கு என்னை ஞாபகமிருக்குமோ தெரியவில்லை. அவளிடம் இருபது ரூபாய்த் தாளை நீட்டுகின்றேன். காசை வாங்கியவள் கைகளிரண்டையும் கூப்புகின்றாள். முகத்தில் நன்றியுணர்வு தென்படுகிறது. இப்படியே ஆயுள் முழுவதும் இவள் காலத்தைக் கழிக்கப் போகின்றாளா? இவளும் மனித ஜென்மம் தானே. இவளுடைய உணர்வுகள் மட்டும் மற்றையசிறார்களிலிருந்து விதி விலக்கா? என் மனம் சிந்தனையில் மூழ்கியிருந்தது. திடீரென அவள் யாருடனோ கதைப்பது போலிருந்தது.

அவளின் அருகே ஒரு சீலையால் ஏழெட்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் போர்த்துக்கொண்டு சுருண்டு படுத்திருந்தான். அவனது போர்வையை விலக்கி, அவனருகே சென்றவள் தம்பி !இப்பதான் காசு கிடைக்குது; நான் கடையில போய் ஏதாவது சாப்பிடுறதுக்கு வேண்டியாறன்; நீ ஒரு இடமும் போகாமல் இதில இரு; சொல்லி விட்டுக் கடையை நோக்கி ஒடுகிறாள். அந்தப் பையன் யாராக இருக்கும்; அவளதுமுகச்சாயலிலேயே இருக்கிறான; அவளது சகோதரனாய் இருக்குமோ? அவளிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளுவம். திட்டமிட்ட படி சிறிது தூரம் விலத்தி நின்றேன்.

கடையில வாங்கி வந்த சாப்பாட்டுப் பார்சலை விரித்தவள் தானே அதனைப்பிசைந்து அவனுக்குக் கொடுத்து, அவன் வயிறார உண்ட பின்பே மீதியாயிருந்ததைத் தான் உண்கிறாள். சாப்பிட்ட பின்னர் அந்த இடத்தைத் தன்கால்களாலேயே கூட்டி ஒதுக்கிவிட்டு உறங்குவதற்கு ஆயத்தப்படுத்துகிறாள். உண்ணுவதும்,உறங்குவதும் அதேயிடம் தான் போலும். அவள் மனம் எத்தனை விரக்தி நிலையில் இருக்குமென்பதை எண்ணிப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

நான் அவளருகே சென்று ''பக்கத்தில் இருக்கிற தம்பி உமக்கு யார்? என்று கேட்டேன்.'' என்னோட கூடப் பிறந்த ஒரேயொரு ரத்த உறவு இவன் தான். அவள் முகத்தில் சோக ரேகைகள் இழையோடுகின்றன.அப்பா அண்டைக்கு சந்தையில் இந்தத்தம்பியை நான் காணலையே? என்னையறியாமலேயே

# பருவங்கள்

என் வாய் கேட்டுவிட்டது. ஆ....ஆ... அண்டைக்கு சந்தையில என்னோட கதைச்சது நீங்கதானே. மீண்டும் அவள் கரம் கூப்புகிறாள். அன்று அவளைப்பற்றி அறிய எவ்வளவு ஆர்வப்பட்டேனோ? இப்ப அந்தப் பையனைப்பற்றி அறியவும் ஆர்வப்படுகிறேன் என்பதை அவளாகவே உணாந்திட்டாள் போலும். தன் தம்பியின் அவல நிலையையும் சொல்லத்தவறவில்லை ''இதுவும் என்னுடைய சோகநிலையின் தொடர்கதை தான்''என்றவள் தொடர்ந்தாள்.

''அன்று அம்மாவும், அப் பாவும் ஷெல் வீச்சுக்கு இரையாகி மண்ணில் உயிரற்ற உடல்களாக விழுந்த போதுஎன்னை யாரோ ஒருவர் கூட்டிச் செல்ல வந்த அதேகணம் என் தம்பியையும் இன்னொரு கொடியவன் கூட்டிச் சென்றது எனக்கு ஞாபகமிருக்கு. அப்ப தம்பிக்கு மூண்டுநாலு வயதுதான் இருந்திருக்கும்.என் பெற்றோரின் உயிரற்ற உடலிலிருந்து பீறிட்ட இரத்தத் தைக்கைகளால் அணைத்தவாறே அம்மா, ரத்தம் அம்மா....என ரத்தத்தை கண்ட பயத்தால் அவன் வாய் முணுமுணுத்தது.ஆனால், அந்தக் கொடியவன் ஒரு சொக்லேட் பைக்கற்றை காட்டி அழைக்க செங்குருதி தோய்ந்த கைகளுடனேயே ஓடிச் சென்றவன்.அவ்வளவு தான் என் நினைவிலிருக்கு அவன் கூறி முடிக்கும் போதே கண்கள் குளமாகி விட்டன. அவள் ஆற்றாமையினால் தொடர்ந்தும் கூறினாள்.

''இப்ப கொஞ்ச நாளைக்கு முதல் தனியாய் ஒரு மரத்தடியில் இருந்தபோது எனக்கு முன்னாக ஒரு கறுப்பு கண்ணாடி போட்ட வான் வந்து நிண்டுது. நான் அதைப் பெரிதாப் பாக்கேல. அதற்குள என் தம்பி இருந்ததை அந்த நேரம் நான் அறியேல ''இதில இருப்பவ தான் உன்ர அக்கா; இதிலை இறக்கி விடுறன்! நீ அவவோட போயிரு என்று கூறி தம்பியை இறக்கியது தான் வானும் மின்னல் வேகத்தில் பறந்து விட்டது.

அக்கா,என்று ஓடிவந்த தம்பி என்னைக் கட்டி அணைத்து அழுதான். என்னுடைய தம்பி தான் என்று உடனே அறிய முடிஞ்சது. அன்றிலிருந்தது போல் அதேபிஞ்சு முகம். ஆள்தான் கொஞ்சம் உயர்ந்திருந்தான். அழுது முடிந்த பின்பே என்ன நடந்தது? என்று கேட்டேன். அவன் தனக்கு ஏற்பட்ட கொடுரங்கள் அனைத்தையும சொன்னான். அவன் உடம்பிலே ஏற்பட்டிருந்த அடிகாயங்களை காட்டினான். இரத்தம் கொதித்தது! என்ன செய்வது? எங்கட அம்மா,அப்பா இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமோ அவள் கூறிக்கொண்டே அவனுடலை மூடியிருந்த சேலையை விலக்கிக்காட்டினாள். அவன் உடம்பு அடிகாயங்களால் மட்டு மல்ல சூட்டுக் காயங்களாலும் தளும்புகளாக ஓவியம்போல் பட்டை தீட்டப்பட்டிருந்தது. இந்தச் சின்னஞ்சிறு உள்ளத்தில் எத்தனை உளச் சோர்வுகள் ஏற்பட்டிருக்கும்.

அந்தப் பச்சிளம்பாலகர்களுக்கு இது வரை உதவி செய்ய யாருமே முன் வரவில்லை. என்பதை நினைக்க உளளம் குமுறியது. அடுத்த கணமே அவர்களுக்கு அறிவுரை கூறி அவர்களிருவரையும் அழைத்துக் கொண்டு, இனி வரும் அவர்களது

எஸ். காவியா

எதிர்காலமாவது இருள் நீங்கி ஒளி வீச வேண்டும். என்ற நல்லெண்ணத்துடன் ''அன்னை இல்லம்'' நோக்கி நடக்கிறேன். இச்சிறுவர்களின் வரவை எண்ணி அன்புக் கரம் நீட்டி அன்னை இல்ல வரவேற்பு வாசல் திறந்திருக்கிறது.உறவிழந்த எவருக்குமே கைகொடுக்க ''அன்னை இல்லம்'' தயாராயிருக்கிறது.





ஸ்ரீலங்கா தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை வடக்கு -கிழக்கு மாகாண தெரிவு செய்யப்பட்ட நூலகர்களுக்கும் கொழும்பில் நடாத்திய பயிற்சிப்பட்டறையை சபைத்தலைவர் பேராசிரியர் எஸ்.திஸ்ஸகாரியவாசகம் ஆரம்பித்து உரையாற்றுவதையும் சபைப்பிரிவுத்தலைவர் டி.ஏ.தர்மசேன, பருத்தித்துறை பிரதேச சபை பிரதம நூலகர் எஸ். திருச்செல்வம் ஆகியோர் இருப்பதையும் நூலகர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(பரு. நிருபர்)

# செய்தித் துளிகள்

## கூட்டுறவுத் தின விழா ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 27ஆம் திகதி திருகோணமலையில் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் நடாத்தப்படவிருந்த கூட்டுறவுத் தினவிழா பின்பு ஓர் தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தலைமை அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (உ)

## குளம் புனரமைப்பு

(பளை)

பச்சிலைப்பள்ளிப் பிரதேச கமநல கேந்திர நிலைய பிரிவிற்குட்பட்ட தம்பகாமம் குளம் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளது.

அதேசமயம் கோயில்வயல், இயக்கச்சி ஆகிய பிரதேசங்களில் உள்ள புதிய கமக்கார அமைப்புக்களுக்கு இச்செயற்பாட்டிற்காக தெரிவுசெய்யப்படவுள்ளதாக பச்சிலைப்பள்ளி கமநல கேந்திர நிலையத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-97)

## விழாக்காலத்தில் விசேட பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை சரவணை சின்னமடு தேவாலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 5ஆம் திகதி திருச்சொரூப பவனியுடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை, இவ்விழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களின் நன்மை கருதி விழாக்காலங்களில் விசேட போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-47)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் ஜே/49 பிரிவில் மீள் குடியேறியுள்ள மக்களின் பிரச்சினைகள் பற்றிய ஆராய்வுக் கூட்டமொன்று கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை புனித மரியாள் மகளிர் பாடசாலை மண்டபத்தில் கிராம அலுவலர் ஜே.பத்திநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதில், விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பிரிவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (உ-18)

## இணுவிலில் திருடர் தொல்லை

(இணுவில்)

நள்ளிரவு நேரத்தில் கடையின் கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த பெறுமதி வாய்ந்த பால்மா வகைகளையும் சுமார் 21ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் கடந்த ஞாயிறன்று இரவு இணுவில் கோவில் வாசல சந்திக்கு அண்மையில் உள்ள கலோசன் ஸ்ரோரில் இடம்பெற்றுள்ளது.

அதேவேளை, இணுவில் நடுவிளாத்தி ஞானவைரவர் ஆலயத்தில் அண்மையில் நள்ளிரவுவேளை கூரையைப் பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அவ்வாலயத்தில் இருந்த 5 ஆயிரம் ரூபா பணத்தைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இவ்விரு திருட்டுச் சம்பவம் தொடர்பாகவும் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து இணுவில் பகுதியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-108)

## வேலை நிறுத்தத்தில் தாதிமார் தொ.ச. ஈடுபடாது

(கொழும்பு)

சுகாதாரத் துறையைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி நடத்தவிருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் அரச சேவை தாதிமார் தொழிற் சங்கம் பங்குபற்ற மாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அரச வைத்தியர்களுக்கு அண்மையில் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பதால் தமது சம்பள முரண்பாடுகளும் தீர்க்கப்பட வேண்டும் எனக் கோரி சுகாதாரத் துறையைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் இப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளமை இங்கு குறிப்

## வீதிச் சோதனை

(யாழ்ப்பாணம்)

லெப்டினன் செல்லக்கிளி அம்மானின் பிறந்த இடமான திருநெல்வேலி கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் பெருமளவு இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் கோவிலை அண்டிய பகுதியில் இராணுவத்தினர் சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். இதனால், அப்பகுதியால் செல்லும் மக்கள் அச்சம் கொண்டு தமது பயணங்களை வேறு பாதைகளால் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மேற்படி பாதையில் சென்ற இளைஞர் யுவதிகளின் அடையாள அட்டைகளும் இராணுவத்தினரால் பரிசோதிக்கப்பட்டன. (உ-4)

## ஜீப்புகள் கையளிப்பு

(கொழும்பு)

விவசாய அபிவிருத்திக்கான இந்தியாவின் கடன் வழங்கும் திட்டத்திற்கமைய 150 ஜீப் வண்டிகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கும், மாகாணசபைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் பணிப்பின் பேரில் கமத்தொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சரான எஸ்.பி.திஸநாயக்கா இதை வைபவ ரீதியாக நேற்று முன்தினம் தனது அமைச்சு அலுவலகத்தில் வைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாகாண சபைகளுக்கும் வழங்கினார். (உ-10)

## வீடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் சிவாஜி கணேசனின் "இரும்புத் திரை" வீடியோ படக்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10மணிக்கு புவியியற் துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என் புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

## ப.நோ.கூ. சங்க கிளைகளுக்கு புதிய கட்டடங்கள்

பச்சிலைப்பள்ளி பல.நோ.கூ. சங்கத்தின் கீழ் இயங்கிவருகின்ற மாசார் இயக்கச்சிக் கிளைகளுக்கு விரைவில் புதிய கட்டடங்கள் நியமிக்கப்படவுள்ளன.

இதற்கான நிதியுதவியை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் வழங்கியுள்ளார்.

பளை பல.நோ.கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான காணியில் பளை நகரக் கிளை நிலையம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் சங்கத் தலைவர் சி.வதனராசா தெரிவித்துள்ளார். (உ-97)

## சங்கானைக் கிளை சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

சங்கானை மக்கள் வங்கி சகல வாடிக்கையாளர்களினதும் நலன் கருதி நாளை 26ஆம் திகதியில் இருந்து பிரதி சனிக்கிழமை தோறும் மு.ப. 9.00 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை திறந்திருக்கும் என மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பணவைப்புக்களை ஏற்றல் தங்க நகை அடகுச் சேவை என்பன இத் தினத்திலும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-18)

## பண்டிதர் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலன சபையால் கடந்த வைகாசி மாதம் நடாத்தப்பட்ட சைவ சித்தாந்த பிரவேச, பால, பண்டிதர் தேர்வுப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

சைவசித்தாந்த பிரவேச பால பண்டிதர் தேர்வுகளில் சித்தியடைந்துள்ள 9பேரின் விபரங்கள் வருமாறு:-

**பிரவேச பண்டிதர் (பிரிவு-2)**

செ.திருவிளங்கம்


**பால பண்டிதர் (பிரிவு -3)**

க.சசிலேகா

**பண்டிதர் (பிரிவு - 2)**

கி.கந்தவேள், திருமதி க.கவிதா, கு.சுமுகலிங்கம், க.கலைச்செல்வி, வை.துளசிமலர், மு.நாகறஜனி, சு.

## இடைக்கால வரைபை ஆராயும் கதிர்காமர் குழு...




# வடக்கு - கிழக்கு மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டிகள் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் முதன் முறையாக நடைபெறவுள்ள வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த்தினப் போட்டிகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இதன் பிரகாரம் இன்று யா/வேம்படி மகளிர் கல்லூரியில் - பேச்சு, தனிநடனம், குழுநடனம் ஆகிய போட்டிகளும், யா/மத்திய கல்லூரியில் - விவாதம், தமிழறிவு வினா - விடை, பாவோதல், தனியிசை, குழு-இசை ஆகிய போட்டிகளும், யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் - வாசிப்பு, ஆக்கத்திறன், கதை கூறல், சிங்கள மாணவர்களுக்கான தமிழ்வாசிப்பு, இசையும் அசைவும், வில்லுப்பாட்டு, முஸ்லிம் நிகழ்ச்சி ஆகிய போட்டிகளும்,

யா/ இந்து மகளிர் கல்லூரியில் நாடகம், வீணை, வயலின், புல்லாங்குழல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளன.

நாளை (திறந்த போட்டி நிகழ்வாக) யா/வேம்படி மகளிர் கல்லூரியில் இசை, நாடகப் போட்டியும், யா/மத்திய கல்லூரியில் - சிந்து நடை விசேட கூத்துப் போட்டியும் யா/கன்னியர் மடம் மகா வித்தியாலயத்தில் - தென்மோடி, வடமோடி போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதேவேளை, வடக்கு - கிழக்கு மாகாண தமிழ்த்தின விழா நாளையும் நாளை மறுதினமும் யா/இந்து மகளிர் கல்லூரியில் பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை நடைபெறும் விழாவிற்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மகாலிங்கம் தலைமை தாங்கவுள்ளார்.

நாளைய நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

தமிழ்த்தினப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கலும், "கவின்தமிழ்" எனும் மலர் வெளியீடும் நாளைய தினம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் தமிழ்த் தின விழாவிற்கு மாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தலைமை தாங்கவுள்ளார்.

இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

நாட்டுக்கூத்துப் போட்டிகளில் முதல் இடங்களைப் பெற்ற நாட்டுக் கூத்துக்களும் மாணவர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் அன்றைய தினம நடைபெறவுள்ளன. (உ-4,7,10)

## ஆட்பதிவுத் திணைக்கள நடமாடும் சேவைமூலம் 9 ஆயிரத்து 339 பேர் பயன்

(சுண்டுக்குளி)

கடந்தவாரம் இடம்பெற்ற ஆட்பதிவுத திணைக்களத்தின் நடமாடும் சேவை மூலம் யாழ். குடாநாட்டில் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் 9 ஆயிரத்து 339 பேர் பயன் பெற்றுள்ளனர்.

மொத்தமாக குடாநாட்டிலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் இடம்பெற்ற இந்தச் சேவையால் யாழ்ப்பாணத்தில் 729 பேரும், நல்லூரில் 735 பேரும், கோப்பாயில் 699 பேரும், சங்கானையில் 953 பேரும், சண்டிலிப்பாயில் 869 பேரும், உடுவிலில் 961 பேரும், தெல்லிப்பழையில் 472 பேரும், பருத்தித்துறையில் 696 பேரும் பயன் பெற்றுள்ளனர்.

அதேசமயம், கரவெட்டியில் 491 பேரும், சாவகச்சேரியில் 1034 பேரும், மருதங்கேணியில் 394 பேரும், வேலணையில் 456 பேரும், ஊர்காவற்றுறையில் 264 பேரும், காரைநகரில் 413 பேரும், நெடுந்தீவில் 173 பேரும் பயன் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

அடையாள அட்டைகள் இல்லாது பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்த யாழ். குடாநாட்டு மக்கள் இந்நடமாடும் சேவை மூலம் சிறந்த பயனைப் பெற்றுள்ளதாகத் தெரியவரும் அதேவேளை, குடாநாடு பூராவும் அ.அட்டைக்குப் புதிதாக 5 ஆயிரத்து 821 பேரும், திருத்தலுக்காக 2 ஆயிரத்து 425 பேரும், மீளப்பெற ஆயிரத்து 93 பேரும் விண்ணப்பித்துள்ளனர்.

**University of Jaffna, Srilanka**

**PROFESSOR SIVAPATHASUNTHARAM MAGESWARAN MEMORIAL LECTURE**

| | |
|---|---|
| Date & Time | : 25th July 2003 at 3.00 p.m. (Today) |
| Vemie | : Kailasapathy Auditorium, University of Jaffna. |
| Delivered by | : Professor Miss. S.Arasaratnam, Dean, Faculty of Medicine |
| Title | : "UNDERSTANDING GLYCAEMIC INDEX FOR A HEALTHY LIFE" |

Those who are interested are cordially invited.

(C/6431) VICE - CHANCELLOR

# நல்லவர் காட்டிய பாதையில் நாமும் இறையை வழிபடுவோம்

எமது சமயம் இறைவனும் ஆன்மாவும் நித்தியமானவை என்ற உண்மையினை வலியுறுத்துகின்றது. ''பதியினைப்போல் பசுபாசம் நித்தியமானது.'' என்று திருமூலர் கூறுகின்றார். ஆன்மா பாசம் என்ற ஆண



வமலத் தொடர்பினால் அறிவு முற்றிலும் இழந்துள்ளது. இந்த அறிவினைப்பெறும் பொருட்டே எமக்கு இந்த உடலையும் உட்கருவிகளையும், உலகையும் பரம்பொருளாகிய சிவன் கொடுத்துள்ளார். அரிசிக்கு தவிடு இருப்பது போன்று ஆன்மா ஆணவமலத்தாற் சூழப்பட்டுள்ளது. அரிசியை உலக்கையாற் குத்தித் தவிட்டைப் போக்குவதைப் போல ஆணவத்தை நீக்குவதற்கு விடா முயற்சியும் வைராக்கியமும் கொண்ட வழிபாட்டுமுறைகள் இன்றியமையாதன. இறைவன் நமக்குக் கொடுத்துள்ள தனு கரண, புவன போகங்களுக்கு நன்றிக்கடனைச் செலுத்தி எம்மைப பற்றியுள்ள மலத்தைப் போக்கச் சைவநீதியின் படிவாழ்வதற்கு அவசியமான மனத்தூய்மையினைப் பெறவேண்டும்.

இறைவனை இடையறாது கைகூப்பி வழிபட்டு நமஸ்கரித்து, அவர் புகழ்பாடி, அவர் அருளை நாடல் வேண்டும். முழுநம்பிக்கையுடனும், பக்தியுடனும் வழிபடும் போது ஆணவம் தேய்கிறது. மனத் தூய்மை, பணிவு நேர்மை, அடக்கம் என்னும் சைவநெறி சுட்டும் சீலங்கள் சிறிது சிறிதாக மலரும். இம்முயற்சி சிறு பிராயத்திலிருந்தே இடம்பெறவேண்டும். இதனையே சைவநீதி என்கிறோம்.

நால்வர் காட்டிய தாசமார்க்கம், சற்புத்திர மார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம், இறைவனடி சேர்க்கும் அன்பு மார்க்கங்களாகும். 'என் கடன்பணி செய்து கிடப்பதே' என்று அப்பர் சுவாமிகள் பாடினார். பிறரை தம் உயிர்போன்று மதித்து அவர்களுக்கு அன்புடன் செலுத்தும் பணி இறைபணியாகும் என்ற கருத்தை மாணிக்கவாசகசுவாமிகள் கொண்டுள்ளார். அன்புமயமான சிவப்பரம்பொருளையடைய நாமும் அன்பு மயமாதல் வேண்டும் என்கிறது சைவநீதி.

மனிதனின் உயர்வுக்கும் தாழ்விற்கும் காரணம் அவனது மனம். மனம் பக்குவத்தைப் பெற இறைபற்று, இறைநம்பிக்கை, இறைவழிபாடு, விரத அனுட்டானங்கள் தேவார திருவாசகம் ஓதுதல் என்ற செயல் முறைகளை சைவநீதி நெறிநின்ற ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

''ஓதாமல் ஒருநாளும் இருக்க

## வெள்ளி நற்சிந்தனை

வேண்டாம்'' என ஔவையார் பாடினார். வீடுகளில் தினமும் காலையிலும் மாலையிலும் சந்தியாவந்தனம் செய்தல் நலம். மூத்தோரைப் பார்த்துச் சிறியோரும் இப்பழக்கத்தைப் பழகிக்கொள்வர். இறை வழிபாட்டின்பின் தூய சிந்தனையுடன் புரியும் கருமங்கள் யாவும் நன்மையினையே பயக்கும் என்கிறது. சைவநீதி

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பது ஆன்றோர் வாக்கு. இதன்பொருள் இறை வழிபாடின்றி ஒரு கருமமும் நிறைவு பெறதென்பதே, குருடனுக்கு ஊன்றுகோல் வழிகாட்டி போன்று மனிதனுக்கு உறுதுணை இறைவழிபாடாகும். இறைதுணையின்றி எதையும் சாதிகக முடியாது.

கோயில் வழிபாடு, பிரார்த்தனை, அபிசேகம், பூசைகளில் பங்கு பெறல், தேவாரம் பாடுதல், திருநாமத்தை ஓதுதல், விழாக்கள், விரதங்கள் அனுஷ்டித்தல் தனிப்பட்ட முறையில் மனத் தூய்மையினையும் அடக்கம், பணிவு, மன அமைதியையும் தோற்றுவிக்கவல்லன சிந்தனை,

### திருமதி பூமணி குலசிங்கம்

பேச்சு செயலில் பிறர் நலன் கருதும் அறவாழ்விற்கு வித்திடும் இவற்றை நல்குது சைவநீதி.

எமது தமிழ் இலக்கியங்களும் ஒழுக்கத்தையே மையமாகக் கொண்டுள்ளன. புராணங்கள், காப்பியங்கள் கூட ஆன்மீக விருத்தியினை கருப்பொருளாகக் கொண்டுள்ளன மனிதனைப் பக்குவப்படுத்தி நற்கருமங்களைச் செய்து, நற்பயனையே அடைவது மானிட நோக்காக ஞானிகளும், புலவர்களும் கருதினர். அதற்கேற்ப வாழ்க்கை முறையினையும் கலாசாரத்தையும் வளர்த்தனர். இவை மேன்மைகொள் சைவநீதியின் கருவூலங்களாகும்.

எமது சமய வழிபாட்டு முறைகள், விரதங்கள், விழாக்கள், பண்டிகைகள், கிரியைகள், சடங்குகள் யாவும் சைவநீதியை நிலைநாட்டும் வகையில் மனிதனைப் பக்குவப்படுத்தி நல்லொழுக்கப் பாதையிலேயே இட்டுச் செல்கின்றன. ஆணவமல நீக்கமே வாழ்வில் இலக்கு என்று உபதேசிக்கின்றது. சைவநீதி. எனவே முழுநம்பிக்கையுடன் இறைவனை வழிபட்டு அவர்புகழ்பாடி அவர் அருளாலே மனத்தூய்மையினை பெறவேண்டும். இது சைவநீதி நெறிமுறை சார்ந்த வாழ்விற்கு இட்டுச்செல்லும். அப்பொழுது வீட்டிலும் நாட்டிலும் ஒற்றுமையும் இன்பமும் அமைதியும் நிலவும். □

# மோசடிகளைத் தடுக்க புதிய கடவுச்சீட்டு

(கொழும்பு)

புதிய கடவுச்சீட்டு ஒன்றை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 28ஆம் திகதியில் இருந்து அறிமுகப்படுத்துவதற்கு குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடவுச் சீட்டுக்களில் புகைப்படத்தை மாற்றி அதன்மூலம் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடுப்பதற்காகவே இந்தப் புதிய கடவுச்சீட்டு அறிமுகமாகவுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில் கடவுச் சீட்டுக்களை தவறான முறையில் பயன்படுத்தி சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்வோரின்தொகை கடந்த சில காலங்களில் அதிகரித்து வருகின்றதை தடுக்கும் வகையிலான இப் புதிய கடவுச்சீட்டுக்கள் இந்தோனேசியாவில் உள்ள அச்சகம் ஒன்றில் அச்சிடப்பட்டுள்ளன.

அத்துடன், இப்புதிய கடவுச்சீட்டு பாதுகாப்பான அச்சக முறைமையுடன் உயர் தொழில் நுட்பத்தையும் கொண்டதாக அமைந்துள்ளது என்றார். (உ-10)

# பிரதேச செயலர் பிரிவுகள் தோறும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

(சில்லாலை)

ஜி.ரி.சற்.நிறுவனத்தின் ஏற்பாட்டில், குடாநாட்டில் உள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் படித்த இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம், கடந்த 20,22ஆம் திகதிகளில் ஆவரங்கால், பண்டத்தரிப்புப் பகுதிகளில் இக்கருந்தரங்குகள இடம்பெற்றுள்ளன.

நேற்றையதினம் வேலணை மகா வித்தியாலயத்திலும் இன்றைய தினம், உடுவில் ஞானப்பிரகாசர் மண்டபத்திலும், நாளையதினம் மூளாய் வைத்தியசாலையிலும், எதிர்வரும் 29ஆம் திகதி காரைநகர் வியாவில் மகாவிததியாலயத்திலும், எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் ஞானபண்டித பாடசாலையிலும், 11ஆம் திகதி பருத்தித்துறை சிவகுரு வித்தியாசாலையிலும் இக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன. (உ-58)

# குரங்கு பாஞ்சான் முகாமை அகற்ற புலிகள் மறுப்பு

## கண்காணிப்புக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

குரங்கு பாஞ்சான் குளத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமை அகற்றுவதற்கு புலிகள் மறுப்புத்தெரிவித்துள்ளனர் என கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழு பிரதி நிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பின் போதே இம்மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்புக்குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இம் முகாமை அகற்றுவதற்கு முன்னர் அது அமைந்துள்ள பிரதேசம் பற்றி காணி மதிப்பீடு செய்யப் போவதாக சு.ப.தமிழ்ச்செல்வன் கூறினார்.

இவவிடயம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் எழுத்துமூலம் பதிலை நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொருட்டு விரைவில் வன்னிசெல்லவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கணகாணிப்புக்குழுவின் பிரமாணங்களுக்கு அடிபணியத் தயார் இல்லை என தமிழீழ விடுதலைப்புலிகள் பகிரங்கமாக அறிவித்திருப்பது இதுவே முதற்தடவை, இது தொடர்பாக விரிவான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளது எனவும் அவர்மேலும தெரிவித்துள்ளார். (தி)

# படையினரின் அடாவடிகுறித்து க.கா.குழு தீவிர விசாரணை

(கொழும்பு)

வாழைச்சேனையில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மூவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினர் தீவிர விசாரணையை மேற்கொண்டு வருவதாக கண் காணிப்புக் குழுவின் ஊடகப் பேச்சாளர் ஏக்னஸ் பிரகாவொட்டிர் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை இரவு விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவரை இராணுவத்தினர் கைதுசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொதுமக்கள் செய்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால் கைவிடப்பட்டது தெரிந்ததே.

இதேவேளை, இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு உள்ளான மேற்படி மூன்று இளைஞர்களும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரும் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சம்பவத்தில் பொதுமக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது வாகனங்கள் சில கல்வீச்சுக்கு உளளாகி உள்ளன. கண்காணிப்புக் குழுவின் வாகனத்தின் மீதும் கல் வீச்சு இடம்பெற்றுள்ளது.

பொதுமக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டங்களைத் தவிர்க்க முடியாதெனக் கூறியுள்ள கண் காணிப்புக்குழு வாழைச்சேனை சம்பவத்தை அனுமதிக்க முடியாதெனவும் தெரிவித்துள்ளது. (உ-8)

## திருநாள்திருப்பலி

(சில்லாலை)

சிலலாலை புனித யாகப்பர் ஆலய திருநாள் திருப்பலி இன்று காலை 8மணிக்கு நடைபெறவுள்ளது. திருப்பலியைத் தொடர்ந்து திருச்சுரூபப் பவனியும் இடம்பெறவுள்ளது.(உ-58)

## நினைவுப்பேருரை

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரன் நினைவுப் பேருரை இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் இடம் பெறவிருக்கின்றது.

இன்று மாலை 3மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில் மருத்துவத்துறை பீடாதிபதி பேராசிரியர் செல்வி வி.அரசரட்ணம் நினைவுரையை வழங்குவார். (பி)

## ஆடிஅமாவாசையன்று வர்த்தக நிலையங்கள் பூட்டு

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும 28ஆம் திகதி திங்கட்கிழமையன்று வர்த்தக ஊழியர்கள ஆடிஅமாவாசைக் கடமைகளைச் செய்வதன் பொருட்டு அனைத்து வர்த்தக நிலையங்களையும் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (உ-10)

# ரயில்வே திணைக்கள ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தை அதிகாரசபையாக மாற்றியமைக்க எதிர்ப்புத்தெரிவித்து எதிர்வரும் 30 ஆம் திகதிமுதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதற்கு 52 ரயில்வே தொழிற் சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

ரயில்வேத் திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியதை உடனடியாக வாபஸ்பெறா விட்டால், வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதென ரயில்வேத் தொழிற் சங்கங்கள் நேற்றுமுன்தினம் இரவு கூடித் தீர்மானித்துள்ளன.

ரயல்வேத் திணைக்களம் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அதிகார சபையாகச் செயற்படும் என போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பன வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தார்.

இம்முடிவை அரசு உடனடியாக மாற்றாவிட்டால் எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தவும் தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன. (தி)



இணுவில் பொது நூலக இலக்கிய மன்ற வெளியீடான இணுவையூர் உத்திரன் எழுதிய ''நிறங்கள்'' சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவின்போது நூலகத்தலைவர் சசிக்குமார் உரையாற்றுவதையும், கலாநிதி க.குணராசா (செங்கை ஆழியான்) கௌரவிக்கப்படுவதையும், லண்டன் கிளை அமைப்பாளர் இ.சிவகுமார் நூலை வெளியீட்டுவைக்க தொழிலதிபர் சு.பொ.நடராஜா அவர்கள் நூல் பிரதியை பெற்றுக்கொள்வதையும், விழாவிற்கு வருகை தந்த கலாநிதி சொக்கலிங்கம் (சொக்கன்), பேராசிரியர் கிருஷ்ணராசா, மகாவித்துவான் வீரமணி ஐயர், ஆசிரியர் விஜயசுந்தரம் ஆகியோர் படங்களில் காணப்படுகின்றனர்.

# சதாமின் புதல்வர்கள் கொல்லப்பட்டதை நிரூபிக்கும் படங்கள் வெளியிடப்படும்

(வாஷிங்டன்)

சதாம் ஹுசைனின் இரண்டு புதல்வர்களும் அமெரிக்கப் படைகளால் கொல்லப்பட்டமை உண்மைதான் என்பதை நிரூபிக்கும் புகைப் படங்களை அமெரிக்கா விரைவில் வெளியிடும் என்று பாதுகாப்புத் துறை அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட குசே, உதே ஆகிய இருவரது உடல்களும் அவர்களின் பல் அமைப்புகள் பற்றிய பதிவுகள் மூலமும் அவர்கள் ஆட்சியின் போது பதவியில் இருந்த 4 அதிகாரிகள் மூலமும் உறுதி செய்யப்பட்டதாக அமெரிக்கப் படைகள் அறிவித்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

அடையாளம் கண்டவர்களில் ஒருவர் முன்னாள் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ். இவர் ஏப்ரல் மாதம் அமெரிக்கப் படைகளிடம் சரணடைந்தார்.

அந்த இரண்டு சகோதரர்களும் மரணமானது அவர்களின் ஆட்சி போய்விட்டது இனி திரும்ப மாட்டாது என்பதற்கு ஆதாரமாகும் என்று அதிபர் புஷ் கருத்து வெளியிட்டுள்ளார். அந்த ஆட்சியில் எஞ்சியுள்ள எல்லாவற்றையும் அழிப்போம் என்ற வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்றார் புஷ்.

சதாமின் புதல்வர்கள் பற்றிய இரகசியத் தகவல் கொடுத்த ஈராக்கியர் தற்பொழுது பாதுகாப்புக் கைதியாக வைக்கப்பட்டுள்ளார் என்று அதிகாரிகள் கூறினர். (பி)

### சதாமின் குரல் மீண்டும் ஈராக்கில் ஒலிக்கிறது

ஈராக்கின் ஆட்சியிலிருந்து பதவி கவிழ்க்கப்பட்ட சதாம் ஹுசைனின் பேச்சு அடங்கிய ஒலிநாடாவொன்றை அரபுத் தொலைக்காட்சி ஒன்று ஒலிபரப்பியுள்ளது.

அதில் பேசிய சதாம், அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ஒன்றுபட்டுப் போரிடுங்கள், அமெரிக்காவால் உருவாக்கப்படும் ஈராக்கிற்கான இராணுவத்தினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம்.

ஈராக் தலைநகர் பக்தாத்தை கடந்த ஏப்ரல் 9ம் திகதி அமெரிக்கக் கூட்டுப் படையினர் கைப்பற்றினர். இதனையடுத்து எனது பாத் கட்சியையும் நாட்டு மக்களையும் பகைவர்களை எதிர்த்துப் போரிட வேண்டுமென அறிவுறுத்தினேன். தற்போதும் அவர்களுடன் தொடர்புகொண்டு இந்த அறிவுறுத்தலை விடுத்துவருகின்றேன்.

இந்நிலையில் ஈராக் மீது போர் இன்னும் முடியவில்லை என்று அமெரிக்கா கூறுகின்றது. ஒரு வகையில் இதனை நான் வரவேற்கின்றேன். எனது கட்சி இன்னும் பிளவுபடவில்லை, மக்களின் உறுதி தளரவில்லை என்று கூறினார். கடந்த காலங்களில் சதாம் ஹுசைன் பேசியதாக வந்த ஒலிநாடாக்கள் அவரது நிஜமான குரல் என்று உறுதி செய்யப்பட்டது. அத்துடன் அவற்றைக் கட்டாரிலுள்ள அல்-ஜஸீரா தெலைக்காட்சி ஒலிபரப்பியது. ஆனால் இந்த ஒலிநாடா சதாமினுடையது என்று இன்னும் உறுதி செய்யப்படவில்லை என கூறப்படுகின்றது. (பி-2)



தலை ஒட்டிப்பிறந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகள் அறுவைச் சிகிச்சைக்காக சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, இடுப்பு ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகளை மடியில் வைத்து கொஞ்சிய காட்சி. இரட்டைச் சகோதரிகளின் அறுவைச் சிகிச்சை தோல்வியுற்றாலும், இக்குழந்தைகளின் அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது.

## ஈரானுடன் இராஜதந்திர உறவை துண்டிக்க கனடா யோசனை


(ஒட்டாவா)

ஈரானுடனான இராஜதந்திர உறவுகளை துண்டித்துக்கொள்வது குறித்து கனடா கவனம் செலுத்தி வருகின்றது.

ஈரானிலுள்ள தமது தூதுவரை திருப்பி அழைக்கவும் ஆலோசிக்கப்படுகின்றது. கனடாவின் பெண் ஊடகவியலாளர் ஈரானிய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்த போது மர்மமான முறையில் மரணமானது குறித்து கனடா அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதனையடுத்து இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

இவ்வார இறுதியில் தூதுவர் நாடு திரும்பவுள்ளதாகவும் அவர் நாடு திரும்பியதும் ஈரானுக்கு எந்த வகையில் அழுத்தம் கொடுப்பது என்பது பற்றி ஆராயப்படும் என்று கனடா வெளிவிவகார அமைச்சர் பில் கிராம்ப் கூறியுள்ளார். (பி-2)



ஸ்பெயின் பார்சிலோனாவில் 10 மீற்றர் பிளாட்பார்ம் டைவிங் போட்டி நடைபெற்றது. அதில் இரண்டு வீரர்கள் இணைந்து பலவிதமான டைவ்-களை அடித்து பார்வையாளர்களை அசத்தினர். அது போன்றதொரு டைவ் அடிக்கும் காட்சி.

# வடகொரியா அணுவாயுத உற்பத்திகளை முன்னெடுக்க இடமளிக்கக் கூடாது

## பிரிட்டிஷ் பிரதமர் வலியுறுத்துகிறார்

(லண்டன்)

வடகொரியா தொடர்ந்து அணுவாயுத உற்பத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல அனுமதிக்கக் கூடாது என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச சட்டங்களை மீறும் இது போன்ற நாடுகளுக்கு எதிராக சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் 9 மாதமாகத் தொடரும் இந்த சர்ச்சைகள் மிகவும் கவனமாகக் கையாளப்பட வேண்டும் என்று பிரிட்டிஷ் பிரதமர் கருதுவதாகத் தெரிகின்றது.

இந்த விடயத்தில் இராணுவ ரீதியான அச்சுறுத்தல்கள் பயன் பெறாதென தமது சீன விஜயத்தின்போது ரொனி பிளேயர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வடகொரியாவின் இச்சிக்கலைத் தீர்த்துக்கொள்வதற்கு பல தரப்புப் பேச்சுக்களை நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று அமெரிக்காவில் நடைபெறவுள்ளது. இதில் ஜப்பான், சீனா, அமெரிக்கா ஆகிய 3 நாடுகளும் இடம்பெறவுள்ளன.

எனினும், இப்பேச்சுவார்த்தைகளுக்கு வடகொரியா ஒத்துழைப்பு வழங்குமா என்பது சந்தேகமாகவே உள்ளதென அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (பி-2,9)




பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாத இயக்கங்களினால் இந்தியாவில் நடத்தப்பட்டுவரும் பயங்கரவாத செயல்களுக்கு கண்டனம் தெரிவித்து அகாலி தள தொண்டர்கள் பாராளுமன்ற வளாகத்தின் அருகே நின்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதில் பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பிற்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்.

# சர்வாதிகாரி இடி அமீன் உயிருடன் வந்தால் உடன் கைதாவார்

## உகண்டா ஜனாதிபதி அறிவிப்பு

(கம்பாலா)

சர்வாதிகாரி இடிஅமீன் மீண்டும்




உயிருடன் உகண்டாவிற்கு வந்தால் அவர் கைது செய்யப்படுவார் என்று உகண்டா ஜனாதிபதி ஜுவேனி முஷேபினி தெரிவித்துள்ளார்.

அதேசமயம், இடிஅமீன் இறந்தால் அவரது உடலை உகண்டாவிற்கு எடுத்து வந்து இறுதிக்கிரியைகள் செய்ய அனுமதிக்கப்படும் என உகண்டாவின் நியுவிஷன் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் முஷேபினி கூறியுள்ளார்.

1971ஆம் ஆண்டு முதல் 79ஆம் ஆண்டுவரை உகண்டாவில் ஆட்சி செய்த இடிஅமீன் தன்னுடைய ஆட்சிக்காலத்தில் சுமார் 3 லட்சம் பேரைக் கொன்று குவித்துள்ளார் என்று இவர் மீதான குற்றச்சாட்டுக்களில் தெரிவிக்கப்படுகின்றது.

1979ல் தன்சானியப் படைகள் நடத்திய தாக்குதலையடுத்து இடிஅமீன் உகண்டாவை விட்டுத் தப்பியோடினார். அதன் பின்னர் சிறிது காலம் லிபியாவில் வசித்து வந்த அமீன், பின்னர் நீண்ட காலமாக சவூதி அரேபியாவிலேயே தஞ்சம் புகுந்திருந்தார்.

ஹிட்லரின் தீவிர விசுவாசியாகக் கருதப்படும் இடிஅமீன் தற்போது கடுமையான சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டு கோமா நிலையில் இருக்கின்றார். இவர் உயிர் பிழைப்பது கடினம் என்று மருத்துவர்கள் அவரது உறவினர்களுக்கு அறிவித்துள்ளனர். (பி-2)

WORLD NEWS உலக தரிசனம்

# அக்டோபரில் சீன மனிதர் விண்வெளிக்குச் செல்வர்

(பெய்ஜிங்)

விண்வெளிக்கு அக்டோபரில் மனிதனை அனுப்பத்திட்டமிட்டுள்ளது சீனா.

இதன் மூலம் இத்தகைய பெருமையப் பெறும் 3வது நாடாக சீனா அமையும். இப்போது விண்வெளிக்கு மனிதனை அனுப்பியவை என்ற பெருமை பெற்றுள்ள முதலிரு நாடுகள் முன்னாள் சோவியத் யூனியனும், அமெரிக்காவும் ஆகும். இவற்றில் முதலாவது பயணம் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் அமைந்தது. அப்போது இரு நாடுகளுமே ஒரே ஒரு ஆட்சியாளரையே தமது விண்கலத்தில் அனுப்பின.

மனிதனை ஏற்றிக்கொண்டு விண்வெளி செல்லவுள்ள சீன விண்கலத்தின் பெயர் ஷென்செள-5. எத்தனை பேர் அதில் செல்வார்கள் என்பதையோ அல்லது எந்தத் திகதியில் பயணம் அமையும் என்பதையோ தற்போது கூற முடியாது என்று சீன ராக்கெட் ஆராய்ச்சி நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (பி)

## தமிழக அரச ஊழியர்களின் பிரச்சினையை தீர்க்க

# மத்திய அரசிற்கு எழுதிய கடிதத்திற்கு உரிய பதில் கிடைக்கவில்லை

## கருணாநிதி கடும் விசனம்

(புதுடில்லி)

தமிழக அரச ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசிற்கு எழுதிய கடிதங்களுக்கு உரிய பதில் இதுவரை கிடைக்கவில்லை என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி விசனம் வெளியிட்டுள்ளார்.

இதுவரை இரண்டு கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்ட நிலையில் அவை கிடைக்கப்பெற்றுள்ளன என்று மட்டுமே பதில் அனுப்பப்பட்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களை நேரில் அனுப்பி இது தொடர்பாக பேச முயன்றபோதிலும் அதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறை கூறியுள்ளார்.

வேலை நிறுத்தம், மறியல் போராட்டம் என்பன சட்டவிரோதமான நடவடிக்கைகள் என்பதை ஒப்புக்கொண்ட கருணாநிதி, நல்ல காரியத்திற்காக அவற்றைச் செய்வது தவறு அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் பிரச்சினையில் தலையிட்டு அதனைத் தீர்த்து வைக்குமாறு மத்திய ஆளும் அரசில் அங்கம்வகிக்கும் திமுக, மதிமுக மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி என்பன கோரி வருகின்றன. (பி-9)

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின்
தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.
– குறள்

# வலம்புரி

## தன்நெஞ்சு அறிவது...

1983 ஜூலைக் கலவரம் நடந்து, 20 வருடங்கள் கடந்துவிட்டன. இலங்கைத் திருநாட்டில், தமிழ் மக்களை அன்னியப்படுத்தி அவர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் அல்ல என்ற தொனிப்பில் சிங்கள பேரினவாதத்தால் நடத்தப்பட்ட கலவரம் தமிழ் மக்களின் குருதியைக் குடித்து வெறியாட்டம் கொண்டது. தமிழ் மக்கள் மீதான வெறியாட்டத்தை ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசு வெறுமனே வேடிக்கை பார்த்தது. தமிழர்களின் உயிரற்ற உடலங்களை தீயிட்டுக் கொளுத்திய சிங்களவர்கள் அவர்களின் உடைமைகளை சூறையாடினர். இந்நிகழ்வுகள் கடந்து இருபது வருடங்கள் உருண்டோடி விட்டன. ஆனால் அந்தச்சம்பவங்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய வடுக்கள் இன்னமும் மாறவில்லை, மாறவும் போவதில்லை.

ஆம், தமிழர்கள் என்ற ஒரே காரணத்தால் கண்முன்னே வெட்டிக் கொல்லப்பட்ட நிகழ்வுகள் இன்னமும் பலரை பிரமையாக்கியுள்ளது. அதிலிருந்து மீள முடியாத நிலைக்கு தள்ளியுள்ளது.

இத்தகைய விபரீதம் ஏற்பட்டு இருபது வருடங்கள் கடந்த நிலையில் 1983 ஜூலையில் நடந்த கலவரத்துக்காக - தமிழ் மக்கள் மீது சிங்கள மக்கள் நடந்து கொண்ட வக்கிரத்தனத்திற்காக சிங்கள மக்கள் தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோர வேண்டும் என கொழும்புப் பல்கலைக்கழக அரசியல் துறைப் பேராசிரியர் ஜெயதேவ உபயங்கொட கூறியுள்ளார்.

பேராசிரியரின் கருத்து சிங்கள மக்கள் எந்தளவு தூரம் இனவாதிகளின் பிடியிலிருந்து மீண்டுள்ளனர் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

1983இல் இடம் பெற்ற ஜூலைக் கலவரம் நடந்த போது ஆட்சியிலிருந்த அதே கட்சி இப்போதும் ஆட்சியில் இருக்கும் போது ஜூலைக் கலவரத்துக்காக சிங்கள மக்கள் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என சிங்களப் பேராசிரியர் ஒருவர் கூறியிருப்பது 'தன்னெஞ் அறிவது பொய்யற்க, பொய்த்த பின் தன்னெஞ்சே தன்னைச்சுடும்' என்ற வள்ளுவத்தை நிலை நிறுத்தியுள்ளது.

இருபது வருடங்களுக்கு முன்னர் நடந்த மிகப் பெரும் கொடூர நிகழ்விற்காக இருபது வருடங்களின் பின்னராவது மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற உணர்வு சிங்கள புத்திஜீவிகளிடம் ஏற்பட்டுள்ளமை ஒரு முக்கிய திருப்புமுனை என்றே கூற வேண்டும்.

# ஈராக்கில் இனந்தெரியாதோர் சூட்டதில் இலங்கையரான ஐ.சி.ஆர்.சி. ஊழியர் பலி

## இலங்கைக் கிளை அதிர்ச்சி, அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தின் தென்பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் (I.C.R.C) இரு உறுப்பினர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியதுடன் ஒருவர கொல்லப்பட்ட சம்பவம் குறித்து மேறபடி இலங்கை அமைப்பு ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் வெளியிட்டுள்ளது.

மேற்படி சம்பவத்தில் கொல்லப்பட்டவர் இலங்கையைச் சேர்ந்த தகவல் தொடர்பு தொழில்நுட்பவியலாளர் நடிஷ்ஷா யஸஸாரி ரன்முத்து, ஈராக்கியரான ஓட்டுநர் மஸான் ஹமெட் ரஷிட் காயமடைந்துள்ளார். யூலை 22ஆம் திகதி பக்தாத்தில் தென்பகுதியிலுள்ள ஹில்லா என்ற இடத்துக்கருகில் இச்சம்பவம் நடந்துள்ளதாக செஞ்சிலுவைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கையரான ரன்முத்து 1992ல் ஐ.சி.ஆர்.சியில் சேர்ந்தவர். 37 வயதான இவருக்கு 3 வயதுக் குழந்தையும் மனைவியும் இருக்கிறார்கள். ஈராக்கிலுள்ள ஐ.சி.ஆர்.சி அலுவலகத்தில் தொடர்பு சாதனங்களைப் பொருத்துவதற்காக அவர் அங்கு சென்றிருந்தார்.

குறித்த தினம் பக்தாத் நோக்கி பிரதான வீதியில் அவர்கள் பயணித்துக்கொண்டிருந்த போது சுடப்பட்டுள்ளார்கள். ரன்முத்து ஸ்தலத்திலேயே மரணமானார். காயமடைந்த ரஷிட், ஹில்லா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்கள். சுட்டவர்கள் யார் என்பது பற்றிய தகவல் இன்னமும் கிடைக்கவில்லை. ஈராக்கிய பொலிஸாரும் கூட்டுப் படைகளும் விசாரணைகள் நடத்தி வருகின்றார்கள். அவர்கள் பிரயாணம் செய்த வாகனத்தில் செந்நிற சிலுவை அடையாளம் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருந்தது.

ஈராக்கில் தனது எதிர்கால செயறபாடுகள் பற்றி ஆராயும் நோக்கத்தோடு தாக்குதலின் சூழ்நிலைகள் பற்றி ஐ.சி.ஆர்.சி இப்பொழுது ஆராய்ந்து வருவதாக அறிவித்துள்ளது.

செஞ்சிலுவைகளுடனும், செஞ்சிலுவை சின்னங்களுடனும் பணிபுரியும் ஊழியர்களும் வாகனங்களும் பத்திரமாக போக்குவரத்துச் செய்யவும் உயிர்காக்கும் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதிக்குமாறு ஐ.சி.ஆர்.சி சகல ஆயுதக்குழுக்களையும் கேட்டுக்கொண்டுள்ளது. (பி)



# இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம்களின் பங்குப் பணிகள் குறித்து ஆராய 6 பேர் கொண்ட குழு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உத்தேசிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட நகலில முஸ்லிம்களின் அபிலாஷைகள் குறித்து எவ்வாறான யோசனைகள் உள்ளடக்கப்படவேண்டும் என்பதனை ஆராய்ந்து, முடிவான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும் முகமாக ஆறுபேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்ற கூட்டத்தில். வடக்கு - கிழக்குப் பகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதாவுல்லா அணி, தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவற்றில் இருந்து கலந்து கொண்டவர்களே தமக்குள் உடன்பட்டு இவ்ஆறுபேரையும்நியமித்துள்ளனர்.

இறுதி முடிவை எடுக்கும் முகமாக அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில் மேற்படி தரப்பில் இருந்து தலா 2 உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக அதன் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பாராளுமன்ற உறுப்பினர் அன்வர் ஸ்மாயில் ஆகியோரும், அதாவுல்லா அணி சார்பாக அமைச்சர் நூர்தீன் மசூர், பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஹப்ரத் ஆகியோரும் தேசிய ஐக்கிய முன்னணி சார்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, சேகு இஸ்ஸதீன் ஆகியோரும் இக்குழுவில் இடம் பெறுகின்றனர்.

இக்குழு இடைக்கால நிர்வாக சபைத திட்டநகலில் முஸ்லிம்களின் பங்களிப்பு மற்றும் உள்ளடக்கப்பட வேண்டிய பல விடயங்கள் குறித்து அலசி ஆராய்ந்து இரண்டு வாரங்களுக்குள் முன்மொழியும் யோசனைகள் தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

ஏற்கனவே, சில யோசனைகளை முன்வைத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறிக்கை வெளியிட்டுள்ள அதேவேளை, அதாவுல்லா அணியும், வடக்கு - கிழக்கு வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டு முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட தனி அரசியல் அலகு கிழக்கிற்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படை நோக்கில் சில யோசனைகளை முன்வைத்துள்ளது. தேசிய ஐக்கிய முன்னணி இது பற்றிச் சில ஆலோசனைகளை முன்வைக்கத் தயாராகவுள்ளது.

அதற்கமைய இம்முத்தரப்பும் தத்தமது யோசனைகளை ஒன்றாக்கி "இடைக்கால நிர்வாக சபையில் முஸ்லிம்கள் வகிக்கவேண்டிய பங்கு எவ்வாறு அமைய வேண்டும்" என்பது குறித்து ஒருமித்த அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த அறிக்கை எதிர்வரும் 2 ஆம் திகதி வடக்கு - கிழக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இடைக்கால நிர்வாகசபை தொடர்பான பேச்சுவார்த்தை மேசைக்கு முஸ்லிம் பிரதிநிதிகள் குழுவால் முன்வைக்கப்படும் பொது இணக்கப்பாட்டு அறிக்கையாக இது அமையும் என நம்பப்படுகிறது. (உ-18)

# சீர்குலைந்துள்ள சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட மனித உரிமைகள் ஆ. கு. ஆவன செய்ய வேண்டும்

## மனிதநேய அமைப்புக்களின் தலைவர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் சட்டமும் ஒழுங்கும் இன்னமும் சீர் குலைந்த நிலையில் தான் இருக்கின்றது. இந்த நிலையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், பாதுகாக்கவும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆவன செய்யவேண்டும்.

யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவரான சு.பரமநாதன் நேற்று யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் ஆலோசகர் எஸ்.செல்வகுமரன் தலைமையில் நடைபெற்ற அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் குறிப்பிடுகையில்,

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம ஏற்பட்டதன் பின்னரும், மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன. இதனால், மக்கள் மத்தியில் பல குழப்பங்களும் -அச்சங்களும் ஏற்பட்டு வருகின்றன. மக்களை நிம்மதியாகவும், அமைதியாகவும் இருக்கச் செய்ய வேண்டியது மிகவும் முக்கியம் என்றார்.

நீதிக்கும், சமாதானத்திற்குமான ஆணைக்குழுவின் தலைவரான வண. பிதா ஏ.ஐ.பேர்ணாட் அடிகள் அங்கு குறிப்பிடும் போது,

அரசு இன்று போகின்ற போக்கினைப் பார்க்கின்ற போது, சமாதானம் தூர விலகிப் போய்விடுமோ என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. வேற்று நாட்டுப் படைகளின் பலத்தை அரசு நம்பினால் நாட்டில் இரத்தக் களரி தான் ஏற்படும். எனவே, இதனைத் தடுத்து நிறுத்த மனித உரிமைகள் ஆணைக்குழு அரசிற்குச் சிபார்சு செய்யவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இச் சந்திப்பில் கியூடெக் இணைப்பாளர் வண.பிதா. சீ.ஜீ. ஜெயக்குமார் அடிகள், சீ.வீ.கே. சிவஞானம், திருமதி சறோஜா சிவச்சந்திரன், பொ.விக்கினேஸ்வரன் உட்பட வேறும பலர் பங்குபற்றினர்.

அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம்.ஏ.சி.இக்பால், மாவட்ட இணைப்பாளர் ரூவான் சந்திரசேகரா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (உ-16)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிராம அலுவலர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

எஸ்.ஞானேந்திரன் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-16)

## தினசரி தியானம்

### யோகத்தின் சாரம்

தொண்டு செய்யுங்கள். அன்பு செலுத்துங்கள். தர்மம் செய்யுங்கள். தூய்மைப்படுத்துங்கள். தியானியுங்கள். கடவுளை உணருங்கள். இந்த வார்த்தைகள் உங்களுக்கு யோகம் வேதாந்தம் ஆகியவற்றின் சாரத்தைத் தெரிவிக்கின்றன. நல்லவராயிருங்கள். நல்லவைகளைச் செய்யுங்கள். அன்பாயிருங்கள். பரிவு காட்டுங்கள். இதைத்தான் எல்லா மறை நூல்களும் சொல்லுகின்றன.

சுவாமி சிவானந்தர்

# கொழும்பைத் தூய்மைப்படுத்த பொதுமக்களிடம் உதவி

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் தற்போது இடம் பெற்று வரும் சமூக விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் பொதுமக்களிடம் உதவி கோரி விசேட சுவரொட்டிகளை கொழும்பு நகரெங்கும் ஒட்டுவதற்கான புதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொழும்பு பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் போதி லியனகே தெரிவித்துள்ளார்.

"கொழும்பு நகரை துப்புரவாக்க உதவுங்கள்" எனும் தலைப்பில் அமைக்கப்பட்டுள்ள வண்ணமிகு இச் சுவரொட்டிகள் பரந்தளவில் கொழும்பு நகரின் பல்வேறு இடங்க... கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாதாள உலகக் கோஷ்டியினர், போதைப் பொருள் வியாபாரிகள், கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள், மிரட்டிப் பணம்பெறுவோர், மறைந்து வாழும் குற்றவாளிகள், சிறையிலிருந்து தப்பியோடியவர்கள் ஆகியோர் தொடர்பான தகவல்களை பொலிஸார் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முகமாக அறிமுகப்படுத்தப்படவுள்ள இச் சுவரொட்டிகளில், பொலிஸாருடன் இதுபற்றி தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்களும் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# பாராளுமன்றில் நேற்று பலத்த வாக்குவாதம்

# அபிவிருத்தி லொத்தர் சபை நிர்வாகம் அமைச்சர் மிலிந்தவிடமே உள்ளது

## சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா அறிவிப்பு

(கொழும்பு)

பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பாக ஆளும் கட்சியினர்க்கும் எதிர் கட்சியினர்க்கும் இடையே நேற்று பாராளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதம் இடம் பெற்றது.

பொதுஜன ஐக்கிய 'முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் அத்துல நிமலசிறி ஜயசிங்க இரண்டு புதிய அபிவிருத்தி லொத்தர் சபைகளை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதா? என எழுத்து மூலம் கேள்வி எழுப்பியிருந்தார்.இந்தக் கேள்வியை பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர பாராளுமன்ற உறுப்பினர் அத்துல நிமல சிறி ஜயசிங்க சார்பாக வாய்மூலம் வினாவினார்

இதனையடுத்து இக்கேள்விக்கு பதிலளிக்கு முகமாக அமைச்சர் மிலிந்த மொறகொட இருக்கையில் இருந்து எழுந்த போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்துள்ளதனால் அமைச்சர் மிலிந்த மொறகொட பதிலளிக்க முடியாதென ஒழுங்குப்பிரச்சினை ஒன்றைக் கிளப்பினார்.

இந்த நிலையில் அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான கேள்வி எதிர்க்கட்சி ஏன் சபையில் சமர்ப்பித்தது `என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் டபிள்யூ.ஜே. எம். லொக்குபண்டார கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்பதற்கு முன்னரே இந்தக் கேள்வி அத்துலநிமலசிறி ஜயசிங்காவினால் எழுப்பப்பட்டது எனக்குறிப்பிட்டார்.

இதனை அடுத்து எழுந்த அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பாக சபையில் கேள்வி எழுப்பியதன் மூலம் அந்தச்சபை, அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழேயும் இருக்கிறது என்பதை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக உறுதிப்படுத்தியுள்ளனர் என்று கிண்டலாகப் பதிலளித்தார்.

இதனால் சபையில் பெரும் வாக்குவாதங்களும் கருத்து மோதல்களும் கருக்கட்டத் தொடங்கின

இக்கருத்து மோதலை முடிபு கட்டும் வகையில் ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் உரிய பொறுப்பு பற்றிய விபரங்களை ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஏற்கனவே பாராளுமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதற்கமைய அபிவிருத்தி லொத்தர் சபை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழேயே இருக்கிறது. எனவே அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான கேள்விகளுக்கு பதிலளிக்கும் உரிமை அமைச்சர் மிலிந்த மொற கொடவிற்கு உண்டு என்று சர்ச்சைக்கு முடிபு கட்டினார் 'சபாநாயகர் யோசப் மைக்கல்பெரேரா

இதனைத் தொடர்ந்து எதிர்க் கட்சியினரின் கேள்விகளுக்கு அமைச்சர் மிலிந்த மொறகொட பதிலளித்தார். (த)

# இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் ஒப்படைப்பது மன்னிக்க முடியாத குற்றம்

## சிஹல உறுமயத் தலைவர் அரசு மேல் பாய்ச்சல்

(கொழும்பு)

எந்தவித உத்தரவாதமும் இல்லாமல் சர்வதேச ரீதியில் அங்கீகாரம் அற்ற மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத ஓர் ஆயுதம் தாங்கிய அமைப்பான விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபைத் திட்டநகல் கையளிக்கப்பட்டுள்ளமையை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

அரசாங்கம் எப்படியாவது தனது அதிகாரத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளும் நோக்கிலேயே இவ்வாறு செய்துள்ளது.அரசின் இச்செயல் மன்னிக்கப்பட முடியாத தேசத் துரோகமாகும் என சிஹல உறுமயத் தலைவர் திலக்கருணாரெட்ணா காரசாரமான முறையில் அரசாங்கத்தை சாடியுள்ளார்.

அரசாங்கம் புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்ட நகல் யோசனை தொடர்பாக கருணாரெட்ணா வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது; வடக்கையும் கிழக்கையும் எந்த அடிப்படையும் இல்லாமல் ஒன்றிணைப்பது தொடர்பாக அரசாங்கம் கொடுக்கப்பட்ட சட்ட நகலில் குறிப்பிடப்பட்டிருப்பது எந்தவகையில் நியாயம்? இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுமானால், வடகக்குக் கிழக்கில் இருந்து சிங்களவர்கள் வெளியேறும் நிலை உருவாகலாம்.இடைக்கால நிர்வாகத் திட்ட நகல் பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை புலிகளிடம் கொடுப்பதால் அவர்களது ஆதிக்கம் மேலோங்கும். அவ்வாறாயின் அப்பகுதியில் உள்ள 3லட்சத்து 24 ஆயிரத்து 149 சிங்களவர்களினதும் நிலை என்ன?அதேவேளை மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்கள் கல்வி அதிகாரிகள் கிராமசேவகர்கள் பொறியியலாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ்யே இருக்க வேண்டியுள்ளது. இதனால் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களை புலிகள் அடிமைகளாகவே நடத்துகிறார்கள் இதனால் நிச்சயம் சிங்கள மக்கள் அப்பகுதிகளில் இருந்து வெளியேற வேண்டிய நிலை வரும் இவற்றையெல்லாம் தெரிந்து கொண்ட பின்னும் பாதுகாப்பு, பொலிஸ்,நிலம் தொடர்பாகவும் தாங்கள் புலிகளுடன் பேசத் தயார் என அரசாங்கம் கூறியுள்ளது இது நியாயமா?

மேலும் இற்றை வரை 3 ஆயிரத்து 884 கிலோமீற்றர் நிலப்பரப்பைச் சிங்களவர் இழந்துள்ளதுமல்லாமல் 1லட்சத்து 65 ஆயிரத்து 448 பேர் அநாதைகளாகவும் ஆகியுள்ளனர்.

இந் நிலையை உருவாக்கிய விடுதலைப் புலிகள் எவ்வாறு வட-கிழக்கிலுள்ள சிங்கள மக்களை சீராக பரிபாலனம் செய்வார்கள். ஆயுதப் பயிற்சி பெறுதல், தமிழ் முஸ்லிம், சிங்கள மக்களை கொலை செய்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டுவரும் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை திட்டநகல் கையளிக்கப்பட்டுள்ளமை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைகிறது.இதன் காரணமாக அப் பகுதிகளிலுள்ள சிங்கள மக்கள் நிச்சயமாக வெளியேற வேண்டிய நிலை ஏற்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-18)

## முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடாத்தும் முத்தமிழ் கலை விழா இன்று இரவு 7 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் பிரதம விருந்தினராகவும்,யாழ்கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, கிராம அலுவலர் எஸ்.முத்துக்குமாரசாமி ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-5)

## யாழ்.பல்கலை மாணவருக்கு

(யாழ்ப்பாணம்)

2002/2003 கல்வியாண்டுக்கான மஹா பொல புலமைப் பரிசிலுக்கு தகுதி பெற்று கடந்த மே மாதம் நடைபெற்ற பரிசில் வழங்கும் வைபவத்தில் தமது சான்றிதழ்களைப் பெறத்தவறிய யாழ்.பல்கலைக் கழக மாணவர்கள், தமது மஹா பொல புலமைப் பரிசில் சான்றிதழ்களை பல்கலைக் கழக நலச் சேவைகள் கிளையில் இம் மாதம் 30-ம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாமென நலச் சேவைகள் கிளையின் உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

தமது பாடநெறியை அடுத்த கல்வியாண்டிற்குப் பிற்போட்ட மாணவர்களும் தமது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும். (த-5)

## இத்தாலி செல்ல முயன்ற 166 பேர் நேற்றுக் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்லக் காத்திருந்த 166 பேரை கல்கிசை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மௌத்-வேனியாவில் உள்ள வீடுகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டதாக கல்கிசை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யு.பி. தயாரட்ண தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களுள்29 பங்களாதேஷ் நாட்டவர்களும், 59 பாகிஸ்தானியர்களும் 75 இந்தியர்களும், 3இலங்கையர்களும் அடங்குகின்றனர்.

இவர்களில் எவரிடமும் கடவுச் சீட்டுக்ளோ அன்றி விசா அனுமதிப் பத்திரங்களோ இருக்கவில்லை என தயாரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வாரம் கண்டியில் வைத்து இவ்வாறான 114 பேர் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்ல முற்பட்ட 649 பேர் இவ் வாரம் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (தி)

### புலிகளுக்கு...

தற்பொழுது விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இடைககால நிர்வாக சபை யோசனையானது முழுமையானதொன்றல்ல அதில் ஒரு தொகுதி மட்டுமே விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.இந்த யோசனைகள் தொடர்பாக நோர்வேயின் முன்னாள் தூதுவர் எம்மிடம் மேலதிக விளக்கங்களைக் கோரியிருந்தார்.

விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளுக்கும் ஜனாதிபதிக்கு அரசு கையளித்துள்ள இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபுக்கும் இடையில் அடிப்படையில் எந்தவிதமான மாறுதல்களும் இல்லை. விடுதலைப் புலிகள் அனுப்பி வைக்கவுள்ள பதிலைப் பொறுத்தே அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆலோசிக்கப்படும்.

இடைக்கால நிர்வாக சபைத் திட்ட வரைபு தொடர்பான விடுதலைப் புலிகளின் பதில் கிடைக்காத வரையில் அவ் யோசனைகள் பற்றிய மேலதிகமான கருத்துக்களை அரசு கூறவிரும்பவில்லை.அத்தகைய கருத்துக்கள் எதையாவது, அரசு தற்போது கூறினால் அது பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். எனினும் அரசின் சமாதான முயற்சிகளும் விடுதலைப் புலிகளின் போக்கும் மகிழ்ச்சியை அளிப்பதாகவுள்ளது.

இடைக்கால நிர்வாக சபை அமைப்புத் தொடர்பாக ஜனாதிபதிக்கு அறிவிக்காமை குறித்து பத்திரிகையாளர் ஒருவர் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அமைச்சர் பீரிஸ் இடைக்கால நிர்வாக சபை திட்ட வரைபை ஜனாதிபதியிடம் கையளிக்கக் கூடாது என்ற நோக்கம் அரசுக்கு இருக்கவில்லை. அத்துடன் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான யோசனைகளில் எந்தவொரு சதித்திட்டமும் இல்லை.இது தொடர்பாக நாட்டு மக்கள் எவரும் அரசு மீது சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் கூறினார். (ம)

# காணி அமைச்சர் ராஜித யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்பாணம்)

வடக்குத் தெற்கு சமாதான விளையாட்டு விழாத் தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளுக்காக காணி அமைச்சர் ராஜித சேனரத்னா யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.இதன் பொருட்டு எதிர்வரும் 11-ம் திகதி யாழ்ப்பாணம் வரும் அமைச்சர் அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியளவில் யாழ். செயலகத்தில் இந்த விளையாட்டு விழாத் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தவுள்ளார்.

எதிர் வரும் செப்டம்பர் மாதம் 5,6,7-ம் திகதிகளில் 6 மில்லியன் ரூபா செலவில் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ள இச்சமாதான விளையாட்டு விழாவுக்கு ஆயிரக்கணக்கில் தென்பகுதி வீர வீராங்கனைகள் மற்றும் உத்தியோகத்தர்கள் வருகைதரவுள்ளனர்.

இவர்களுக்கான தங்குமிடவசதிகள் மற்றும் விளையாட்டுக் களத் தெரிவு ஆகியன தொடர்பான நடவடிக்கைளில் இங்கு வரும் அமைச்சர் ஈடுபடவுள்ளார்.

இதேவேளை, பருத்தித்துறை, உடுவில், சங்கானை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர்கள் மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு விழா இடம் பெறவுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (உ-4)

## போலிச் சான்றிதழைக் காட்டி ஆசிரியர் நியமனம் பெற்றவர் 13 வருடங்களின் பின் கண்டுபிடிப்பு

(வவுனியா)

போலிக் கல்விச்சான்றிதழ்களை சமர்ப்பித்து ஆசிரியர் நியமனம் பெற்ற ஒருவர் 13 வருடங்களின் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

1990 ஆண்டு பிரேமதாஸா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனசக்தி உதவி பெறுபவர்களின் குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு உயர்தர பெறுபேற்றின் அடிப்படையில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இதன் போது யாழ்ப்பாணம் முத்துத்தம்பி வித்தியாலத்தில் கல்வி பயின்ற கல்விச் சான்றுகளை சமர்ப்பித்து குறிப்பட்ட நபர் ஆசிய நியமனம் பெற்றுள்ளார்.

எனினும் 13 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் கல்விச் சான்றுகளின் மூலப் பிரதிகளை இவர் உரிய இடத்தில் சமர்ப்பிக்கவில்லை. இதனையடுத்து பரீட்சைத் திணைக்களத்துடன் கல்வித் திணைக்களம் தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் போலியாவணம் சமர்ப்பித்து நியமனம் பெற்றமை கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்நபர் தற்போது வவுனியா செட்டிபலம் கோட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் அதிபராக கடமையாற்றுவதாகவும் தெரியவருகிறது. (ந-13)

### நிரந்தரக்...

உள்ளனர். 35 மீன்பிடிப் படகுகள் சேதமடைந்துள்ளன. கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள மீன்கள் கடலில் கொட்டப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் மீனவர்கள் இன்னொருநாட்டின் கடல் எல்லைக்குள் நுழைந்துவிட்டால் அவர்கள் அந்நாட்டு அதிகாரிகளால் தொல்லைக்கு ஆளாகக் கூடாது என்பதை உறுதி செய்யும் வகையில் இரு நாடுகளுககுமிடையே ஒப்பந்தம் ஒன்று உருவாக்கபபட வேண்டுமென ஜெயலலிதா அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.இதேவேளை இலங்கையுடனான உறவுகளை சீராக வைத்திருப்பதற்கு கச்சதீவையும் அதனைச் சுற்றியுள்ள கடற்பகுதியையும் நிரந்தரக் குத்தகைக்கு இந்தியா எடுத்துக் கொள்ள வேண்டுமென ஜெயலலிதா அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பகுதியில் 5கடல் மைல்வரை மீன்பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இராணுவ சிப்பாயின் துப்பாக்கி அபகரிப்பு

(புத்தளம்)

புத்தளம் ஆனைமடு எனும் இடத்தில் வீதியால் சென்று கொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் ரி.56ரகத் துப்பாக்கியை மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத இருவர் அபகரித்துச் சென்றுள்ளதாகப் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-5)

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் அமைக்கும் இந்திய மத்திய அரசின் ஆலோசனைக்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்து மற்றொரு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாலம் கட்டப்பட்டால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் ஊறுவிளைவிக்கும். தமிழ் நாட்டுக்குள் தற்கொலைக் குண்டு மற்றும் துப்பாக்கிக் கலாசாரத்தை விடுதலைப் புலிகள் கொண்டு வந்து தமது நடவடிக்கைகளை மேற் கொள்ள அது வழி வகுக்கும் எனவும் அவர் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதுடன் கப்பல் போக்குவரதது மேற் கொள்வதற்கும் இது உகந்தது அல்ல எனவும் தெரிவித்துள்ளார். (ந-5)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில்25.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.